www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

THAYAGAM

75¢

13 . 1 . 95

உண்மை:6 தேடல்:27

# தாயகம்

# பேச்சுவார்த்தை முறியுமா?

## ஆனையிறவுப் பாதையைத் திறப்பதில் இழுபறி

வெள்ளிக்கிழமை வவுனியாவில் புலிகளின் தளபதிகளும் இராணுவத்தின் தளபதிகளும் சிவப்புக் கொடியை அசைத்தபடியே வந்து கட்டித் தழுவி கொடிகளை மாற்றிக் கொண்டனர். பின்னர் இரு தரப்பினரும் முன்னரே திட்டமிட்டது போல மற்ற தரப்பினரை ஆயுதங்கள் இருக்கின்றனவா என்று சோதனையிட்ட பின்னர் கைவிடப்பட்ட ஆலயம் ஒன்றில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## புலிகளும் இராணுவத்தினரும் கட்டித் தழுவினர்

மீறல்களை கடந்தும் தொடரும் யுத்த நிறுத்தம்

## ரகுமான் இளையராஜாவை நெ(ா)ருக்குவாரா?

இலங்கைக்கான துரித பணமாற்றுச்சேவை
CD விற்பனையாளர்
SENDURAN & CO
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தரத்தின் சின்னம்

Niru Niru

## நிரு பிராண்ட்®

## Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்
Niru Brand® தயாரிப்புகளே.

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

நிரு பிராண்ட் தயாரிப்புகளின் தரம்
பாவித்தவர்களுக்கு மட்டுமே புரியும்.

**உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா?
என்பதை உறுதிப்படுத்துங்கள்**

*Niru Enterprises Inc,*

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா
இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு
எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

தாயகம்
'உண்மையைத் தேடி'

# புலிகளும் இராணுவத்தினரும் கட்டித் தழுவினர்

## மீறல்களை கடந்தும் தொடரும் யுத்த நிறுத்தம்

யுத்த நிறுத்தத்தின் பின்பாக முதல் தடவையாக இராணுவத் தளபதிகளும் புலிகளின் பொறுப்பாளர்களும் சந்தித்திருக்கிறார்கள். கடந்த புதன்கிழமை தற்போதைய யுத்த நிறுத்தம் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இவர்கள் சந்தித்துக் கொண்டனர். மட்டக்களப்பில் பிரிகேடியர் எச்.எஸ்.அப்புஆராச்சி புலிகளுடன் இந்த பேச்சுவார்த்தைகளை நடத்தினார். திருமலையில் மேஜர் ஜெனரல் சதிஸ் ஜயசுந்தர புலிகளின் தளபதிகளைச் சந்தித்தார். யாழ்ப்பாணத்திலும் இவர்கள் சந்திப்பதாக பாதுகாப்பு உதவி அமைச்சர் அனுருத்த ரத்வத்தை கூறிய போதிலும் அது உறுதிப்படுத்தப்படவில்லை.

வெள்ளிக்கிழமை வவுனியாவில் புலிகளின் தளபதிகளும் இராணுவத்தின் தளபதிகளும் சிவப்புக் கொடியை அசைத்தபடியே வந்து கட்டித் தழுவி கொடிகளை மாற்றிக் கொண்டனர். பின்னர் இரு தரப்பினரும் முன்னரே திட்டமிட்டது போல மற்ற தரப்பினரை ஆயுதங்கள் இருக்கின்றனவா என்று சோதனையிட்ட பின்னர் கைவிடப்பட்ட ஆலயம் ஒன்றில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இரு வெளிநாட்டு சமாதானக் குழுக்களை தாம் புதன்கிழமை சந்தித்துப் பேச இருப்பதாக அனுருத்த ரத்வத்தை தெரிவித்திருந்தார். இந்த இரு குழுக்களும் கிழக்கில் தங்கள் பணிகளைத் தொடங்கின.

வெலி ஓயாவில் நடந்த சம்பவம் தவிர முக்கியமான யுத்த தவிர்ப்பு மீறல்கள் எதுவும் நடைபெறவில்லை. அங்கு

2ம் பக்கம் பார்க்க..

# பேச்சுவார்த்தை முறியுமா?

## ஆனையிறவுப் பாதையைத் திறப்பதில் இழுபறி

புலிகளுடன் நடத்தப்பட்ட மூன்றும் கட்டப் பேச்சுவார்த்தை பாரிய வெற்றி எதனையும் அளிக்கவில்லை. அரசாங்கம் தடை செய்யப்பட்ட சில பொருட்களை கொண்டு செல்வதற்காக பொருளாதாரத் தடையை ஓரளவு தளர்த்தியுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெந்தி தலைமையிலான பேச்சுவார்த்தைக்குழு விமானப்படை விமானத்தில் பலாலி சென்று அங்கிருந்து ஹெலிகொப்டரில் யாழ்ப்பாணம் சென்றது. இவர்களுடன் பத்திரிகையாளர்களும் சென்றனர்.

இரு தரப்பினரும் நடத்திய பேச்சுவார்த்தையின் போது, முதலில் அமுலாக்கப்பட்ட இரண்டு வார யுத்த நிறுத்தத்தை நீடிப்பதற்கு இணக்கம் காணப்பட்டிருக்கிறது. தை 22 வரை திட்டமிடப்பட்டிருந்த இந்த யுத்த தவிர்ப்பு தொடர்ந்தும் அமுலில் இருக்கும். ஆயினும் புலிகளின் மற்றைய கோரிக்கைகளுக்கு இணங்க அரசு மறுத்திருக்கிறது.

புலிகளின் மனநிலையில் தான் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகள் தங்கியிருக்கின்றன, அவர்களின் வேண்டுகோள்களை நிறைவேற்ற நாங்கள் போதியளவு விட்டுக்கொடுத்து விட்டோம் என்று பாதுகாப்புச் செயலாளர் ஹமில்டன் வணசிங்க தெரிவித்திருக்கிறார். பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டதற்கான அறிவிப்பு செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் என்று தெரிவித்த அவர் தற்போது ஏழு பொருட்களுக்கு மட்டுமே தடை விதிக்கப்பட்டிருப்பதாக கூறியுள்ளார். குண்டு பெயரிங்குகள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள், டீசல், பெற்றோல், இரசாயனப் பொருட்கள், ஈயம் ஆகிய பொருட்களுக்கே தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நாளைக்குறிப்பதில் இரண்டு தரப்பினரும் இணக்கம் காண முடியவில்லை. அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை அடுத்த மாதம் ஆரம்பிக்க விருப்பம் தெரிவித்த போதும் புலிகள் அதற்கு மறுத்திருக்கிறார்கள். தரைப் பாதை திறக்கப்பட்டு பொருளாதாரத் தடை முழுமையாக நீக்கப்பட்டால் மட்டுமே அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளைத் தொடர முடியும், அவ்வாறு நீக்கப்பட்டால் உடனடியாக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும் என்று புலிகளின் தலைமைப் பேச்சாளர் தமிழ்ச் செல்வன் கூறியுள்ளார்.

முக்கியமாக மக்கள் அந்தப் பாதையைப் பயன்படுத்த தாம் அனுமதிக்க முன்னர் ஆனையிறவில் உள்ள முகாம் மூடப்பட வேண்டும் என்று புலிகள் நிபந்தனை விதித்திருக்கிறார்கள். ஆனால் அதை மூட முடியாது என்று வணசிங்க கூறினார். மக்கள் அந்தப் பாதையைப் பயன்படுத்தலாம், ஆனால் முகாமை மூட முடியாது என்பதே அரசின் நிலைப்பாடாக உள்ளது.

2ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## கட்டித்தழுவிய.

சிவிலியன் உடைகளில் வந்த இளைஞர்கள் தடை செய்யப்பட்ட பிரதேசத்திற்குள் நடமாடியதாகவும் அவர்கள் எதிர்கொள்ளப்பட்ட போது கிரனேட் ஒன்றை வீசி விட்டு ஓடிவிட்டதாகவும் யாரும் அதில் காயமடையவில்லை என்றும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கடந்த வாரம் சனிக்கிழமை முதல் அமுலான இந்த யுத்த நிறுத்தத்தில் இதுவரையும் பதினைந்துக்கு மேற்பட்ட சிறு மீறல்கள் நடைபெற்றிருக்கின்றன. இவற்றில் பல, தடை செய்யப்பட்ட பகுதிகளுக்குள் நிகழ்ந்த அத்துமீறல்களே. ஆயினும் இவற்றை பெரிய விடயமாக இராணுவம் கருதவில்லை.

ஆயினும் தங்கள் முகாம்களைச் சூழ புலிகள் வருவதற்கு இது இடமளிப்பதால் தாங்கள் புலிகளின் மோட்டார் தாக்குதல்களுக்கு உள்ளாகக் கூடிய ஆபத்து உள்ளதாக இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர். புலிகளின் முகாமைச் சூழ பங்கர்களை வெட்டி தங்களைப் பலப்படுத்திக் கொண்டு யுத்த நிறுத்தம் முறியும் பட்சத்தில் தாக்குதல்களை நடத்தக் கூடும் என இந்த அதிகாரிகள் கருத்துக் கூறியுள்ளனர்.

இதுவரை நடந்த யுத்த நிறுத்த மீறல்களுக்கு புலிகளின் கீழ் மட்டங்களுக்கு தகவல் கிடைக்காததே காரணம் என்று இன்னொரு இராணுவ அதிகாரி கூறினர்.

பலாலி முகாமிற்கு அருகில் சுமார் பதினைந்து புலிகளின் நடமாட்டம் இருந்ததை அடுத்து இராணுவத் தளபதி புலிகளின் பொறுப்பாளருடன் வாக்கி டோக்கியில் இது பற்றி உரையாடியதன் பின்னர் அவர்கள் விலகிச் சென்றிருக்கிருர்கள். தற்போது புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் தொடர்புகள் ஏற்படுத்தப பட்டிருக்கின்றன.

காரை நகர் முகாமிற்கு ஐம்பது யார் தொலைவில் முப்பது வள்ளங்கள் நகர்ந்ததாக இன்னொரு தகவல் கூறுகிறது. இந்த இரண்டு சம்பவங்களும் கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றிருந்தன.

கடந்த திங்கட்கிழமை திருமலைப் பகுதியில் கிராமம் ஒன்றில் புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறி கிராமம் ஒன்றில் ஆயுதங்களுடன் காணப்பட்டதாகவும் கிராமங்களுக்கு ஆயுதங்கள் இன்றியே புலிகள் வர வேண்டும் என்ற யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அவர்கள் மீறியிருக்கிருர்கள் என்றும் இராணுவம் கூறியது. கிழக்கில் ஆயுதங்களுடன் திரிந்த நான்கு புலிகள் தடுக்கப்பட்டு பின்னர் மேலிடத்துடன் தொடர்பு கொண்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

அமைக்கப்பட்ட சமாதானக்குழுக்களின் தலைவர்களாக கிழக்கில் பணியாற்றும் நோர்வேஜியர்களான அவுடன் ஹோல்ம், ஜோகான் கபிரியேல்சன் ஆகிய இருவரும் யூகோஸ்லாவியாவில் பொஸ்னியாவில் முன்பு பணியாற்றியவர்களாவர். இரு தரப்பினரதும் நல்லெண்ணம் காரணமாக எந்த விதமான பிரச்சனையையும் தாங்கள் எதிர்பார்க்கவில்லை என்றும் அரசியல் மட்டத்தில் தான் பிரச்சனை இருக்கும் என்றும் ஹோல்ம் தெரிவித்திருக்கிருர். உள்ளூர் மட்டத்தில் தளபதிகள் பிரச்சனைகளை தீர்க்க உதவுவதாகவும் அது முடியாவிட்டால் என்ன செய்வது என்பது பற்றி யோசிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினர்.

## பேச்சுவார்த்தை.

பாப்பரசரின் வருகையை ஒட்டி புலிகளிடம் வெளியேற விசா பெற்ற ஏழாயிரம் பேரும் வருவதற்காக கத்தோலிக்க ஆயர்கள் புலிகளிடம் அந்தப் பாதையை திறக்குமாறு கோரிய போதும் புலிகள் அதற்கு இணங்கவில்லை.

அரச தரப்பு பேச்சாளரான பாலபட்டபெந்தி பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக இருந்த போதும் இன்னமும் முன்னேற்றம் காணப்படும் என தான் எதிர்பார்த்ததாக கூறியிருக்கிருர். முன்னைய பேச்சுவார்த்தைகளில் வடக்கின் அபிவிருத்திக்காக நான்காயிரம் கோடி ரூபா வழங்குவதாக கூறிய போதும் தற்போது முடிந்த பேச்சுவார்த்தைகளில் அது பற்றி பேசப்படவில்லை.

மீன்பிடி வலயங்களை விஸ்தரிக்கவும் இரவு நேரங்களில் சில இடங்களில் மீன் பிடிப்பதை அனுமதிக்கவும் அரசு உத்தேசித்திருக்கிறது.

## இயக்கத் தலைவர்கள் அச்சம்

யுத்த நிறுத்தம் தமிழ் மக்கள் மனதில் நிம்மதியை ஏற்படுத்தியிருக்கும் அதே வேளையில் தமிழ் அரசியல்வாதிகள் இது குறித்த பயத்தையும் கொண்டுள்ளனர். இந்த யுத்த நிறுத்தத்தை பயன்படுத்தி புலிகள் முன்பு செய்தது போல அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்டக் கூடும் என்று புளொட் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்திருக்கிருர். முன்பு அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், சாம் தம்பித்துரை போன்றவர்களைக் கொன்றதை அவர் சுட்டிக் காட்டினர்.

இதே போன்ற நடவடிக்கைகள் நடக்காது என்று எப்படி எதிர்பார்க்க முடியும் என்று டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பினர்.

ஆனல் இந்த வகையான செயற்பாடுகள் யுத்த நிறுத்த மீறலாகக் கருதப்படும் என்றே ஒப்பந்தம் கூறுகிறது.

## காணமல் போனவர்கள் பற்றி விசாரணை

கடந்த ஆட்சிக்காலத்தில் காணமல் போனவர்கள் குறித்த விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. காணமல் போனவர்கள், கொல்லப்பட்டவர்கள் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட மூன்று குழுக்களும் விசாரணையை ஆரம்பிக்க உள்ளதாக நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கிருர்.

காணமல் போனவர்கள் பற்றி விபரம் தெரிந்தவர்கள் முன்வந்து தகவல்களை தருமாறு கோரப்பட்டிருக்கிறது. நான்கு மாதங்கள் இந்த விசாரணை நடைபெறும். இளைப்பாறிய நீதிபதிகளைக் கொண்ட இந்தக் குழுக்களிடமட் ஏற்கனவே நீதியமைச்சிடம் வழங்கப்பட்ட 300 சம்பவங்கள் பற்றிய கோவைகள் கையளிக்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பாப்பரசரின் வருகையை ஒட்டி பாதுகாப்பு

## கொழும்பில் தேவாலயமும் விகாரையும் தீக்கிரை

கத்தோலிக்க தேவாலயம் ஒன்று தீவைக்கப்பட்டதை அடுத்து விகாரை ஒன்று தீ வைக்கப்பட்டிருக்கிறது. பாப்பரசர் புத்த மதம் பற்றி தெரிவித்த கருத்து இலங்கையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது தெரிந்ததே. பாப்பரசர் இலங்கை வருவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் இந்த வன்செயல்கள் நடைபெற்றிருக்கின்றன. பாப்பரசரின் வருகையை பகிஷ்கரிக்கப் போவதாக பௌத்த குருமார்கள் தெரிவித்ததை அடுத்து இந்தப் பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வர பாப்பரசர் பௌத்த மதத்திற்கான தனது மதிப்பை ரோமில் தெரிவித்தார். பாப்பரசர் இலங்கை வரும்போதும் இது குறித்து கருத்துத் தெரிவிப்பார் என்று கத்தோலிக்க ஆயர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

பாப்பரசர் குணமடையவும் வடக்கிலிருந்து வரும் கத்தோலிக்க யாத்திரிகர்கள் சிக்கலின்றி வந்து சேரவும் அவர்களுக்காக மன்றாடும்படி ஆயர்கள் இலங்கையின் மறுபகுதிகளில் வாழும் கத்தோலிக்கர்களைக் கேட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வரும் கத்தோலிக்கர்களைக் கொண்டு செல்வதற்காக பாதுகாப்புடன் கூடிய புகையிரத சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன.

கொழும்புக்கு வடக்கே பதினைந்து மைல் தொலைவில் உள்ள ரத்தொடுவ என்ற இடத்தில் உள்ள 300 வருடங்கள் பழமையான விகாரையே தீக்கிரையானது. இந்த விகாரையின் அதிபதியே பாப்பரசரின் கருத்துக்களுக்கு எதிராக முன்னணியில் நின்று செயற்படுகிறார். இந்த தீவைப்பில் மூன்று சிலைகள் தீக்கிரையாகின.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்த விகாரைக்கு இரண்டு மைல் தொலைவில் உள்ள புனித சிசிலியா ஆலயத்தில் தீ வைக்கப்பட்டு சிலை ஒன்றும் நத்தார் குடிலும் சேதமாக்கப்பட்டிருந்தன. தான் இந்த தீவைப்பில் சம்பந்தப்பட்டிருப்பதாக அவர்கள் கருதியதால் தான் தன் விகாரைக்கு தீ வைத்ததாக மகாலகமுவ லங்கானந்த தேரோ என்ற அந்த விகாராதிபதி தெரிவித்திருக்கிறார். தனது ஆதரவாளர்களுக்கும் கத்தோலிக்க தேவாலய தீவிபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று தெரிவித்த அவர் பாப்பரசரின் வருகையை தான் எதிர்க்கவில்லை என்றும் அவர் பௌத்த மதம் பற்றி தெரிவித்த கருத்துக்களையே தாம் எதிர்ப்பதாகவும் கூறினார். இவரது விகாரை நீர்கொழும்பில் உள்ள வீடமைப்புத் திட்டம் ஒன்றில் உள்ளது.

ஆனால் கத்தோலிக்க தேவாலயத்தில் நடைபெற்ற தீ சம்பவத்திற்கு மின் ஒழுக்கு காரணமாயிருக்கலாம் என்று அங்குள்ள பங்குத்தந்தை தன்னிடம் தெரிவித்ததாக ஆயர் மல்கம் ரஞ்சித் தெரிவித்திருக்கிறார். இரண்டு சம்பவங்களுக்கும் தொடர்பில்லை என்றே தாம் கருதுவதாக அவர் மேலும் கூறினார்.

இந்த இரண்டு தாக்குதல்களுக்கும் யாரும் உரிமை கோரவில்லை. முதலில் நடைபெற்ற கத்தோலிக்க தேவாலய தீவிபத்து உள்ளூர் பத்திரிகைகளில் வெளியிடப்படவில்லை. இந்த சம்பவம் மதங்களுக்கு இடையில் மோதலை ஏற்படுத்தக் கூடும் என்ற அச்சம் காரணமாக அது பற்றி பிரசுரிக்கவில்லை என்று பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

பாப்பரசரின் வருகையை ஒட்டி தற்போது கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கொழும்பு முழுவதும் 75 பாதுகாப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு அங்கு வரும் பக்தர்கள் சோதனையிடப்படுவார்கள். விசேட பயிற்சி பெற்ற பொலிசார் உலோகங்களைக் கண்டுபிடிக்கும் கருவிகள் சகிதம் சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள். முப்பது செக்கன்களுக்குள் இந்த சோதனை ஒவ்வொருவருக்கும் நடத்தப்படும். அறுபதாயிரம் பொலிசார் இராணுவத்தினருடன் சேர்ந்து சேவையில் ஈடுபடுவர். ஹெலிகொப்டரில் விமானப்படையினரும் கடற்கரையோரமாக கடற்படையும் ரோந்துகளில் ஈடுபடுவர். பாப்பரசருக்கு அருகில் முப்பது மீற்றர் தூரம் வரை யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். சந்திரிகாவுக்கு பாதுகாப்பு வழங்கும் விசேட பொலிசாரே பாப்பரசருக்கும் பாதுகாப்பு வழங்குவர்.

நாடெங்கும் பக்தர்களைக் கொண்டு வர 2500 பஸ்களை கத்தோலிக்கர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கன்னியாஸ்திரிகள், குருமார் மீதும் சோதனை நடத்தப்படும். பாப்பரசர் குண்டு துளைக்காத 'போப்மோபைல்' வாகனத்திலேயே அமர்ந்தபடியே காட்சி தருவார். அவர் செல்லும் பாதைகளில் போக்குவரத்து தடை செய்யப்படும்.

பாப்பரசரின் வருகையைக் கண்டித்து கொழும்பு எங்கும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. புத்த அமைப்புகளின் சம்மேளனம் இந்த போஸ்டர்களை வெளியிட்டிருக்கிறது. 'பாப்பரசர் தன் வார்த்தைகளை நிரூபிக்குமாறு சவால் விடுக்கிறோம்' 'பௌத்த மதத்தை கண்டித்த பாப்பரசரை நாம் எதிர்க்கிறோம்' 'பாப்பரசர் பௌத்தர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்' என்ற வாசகங்கள் இந்த போஸ்டர்களில் காணப்பட்டன.

## கைதிகள் உண்ணாவிரதம்

மட்டக்களப்பில் இராணுவ முகாம் ஒன்றில் புலிகள் என்ற சந்தேகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நூறு தமிழ் இளைஞர்கள் உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொண்டனர். தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று இவர்கள் விடுத்த கோரிக்கைக்கு அவர்களில் 44 பேரை விடுதலை செய்வதாகவும் மீதிப்பேர் குறித்த விசாரணைகளை துரிதப்படுத்துவதாகவும் அதிகாரிகள் உறுதியளித்ததை அடுத்து அவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை உண்ணாவிரதத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஜேர்மனியில் தஞ்சம் கோருவோர் தொகை குறைகிறது

தற்போது ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோருவோரின் தொகை பெருமளவில் குறைந்துள்ளது. கடந்த வருடம் மட்டும் இந்த தொகை அறுபது வீதத்தினால் குறைந்துள்ளது.

ஜேர்மனி தற்போது வெளிநாட்டார் பொருளாதார நலன் நாடி தங்கள் நாட்டுக்குள் வருவதை தடுக்க பல வழிகளிலும் முயன்று வருகிறது. அகதிகளுக்கான அட்டை ஒன்றை வழங்கி அதில் அகதிகள் பற்றிய விபரங்களைக் கொண்டிருப்பதன் மூலம் அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஜேர்மன் முயற்சிக்கிறது.

அத்துடன் ஜேர்மனியில் நீண்ட காலமாக இருக்கும் வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு எவ்வாறு ஜேர்மன் குடியுரிமையைக் கொடுப்பது என்பதிலும் கடும் விவாதங்கள் நடைபெறுகின்றன.

ஜேர்மனியின் எட்டுக் கோடி சனத்தொகையில் 65 லட்சம் பேர் வெளிநாட்டார். இதில் 18 லட்சம் பேர் துருக்கியர்கள். இத்தாலி, கிரேக்கம், போத்துக்கல், யூகோஸ்லாவியா, ஸ்பெய்ன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் துருக்கியர்களுடன் சேர்ந்து தொழிலாளர்களாகக் கொண்டு வரப்பட்டவர்கள். ஜேர்மனியில் வசிப்போரில் அறுபது வீதமான வெளிநாட்டார் பத்து வருடங்களுக்கு மேலாக வசிப்போராவர். மூன்றில் இரண்டு குழந்தைகள் ஜேர்மனியில் பிறந்தவர்கள்.

கடந்த வருடம் 127,210 பேர் அகதிகளாக ஜேர்மன் வந்தார்கள். இது 93ம் ஆண்டில் 322599 ஆக இருந்தது. 92ல் 438,191 ஆக இருந்தது. இதில் கடந்த வருடம் 37 ஆயிரம் பேர் யூகோஸ்லாவியராவர். சென்ற வருடம் இலங்கையர் மட்டும் 4813 பேராவர்.

கிழக்கு ஜேர்மனியில் இருந்த நாற்பதாயிரம் வியட்னாமியரை ஜேர்மனியின் இணைப்புக்கு பின்னர் நாட்டைவிட்டு வெளியேற்ற ஜேர்மனி முனைந்த போது வியட்னாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. பின்னர் வியட்னாமுக்கான நிதியுதவிகளை ஜேர்மன் நிறுத்திக் கொண்டதும் வியட்னாம் பணிந்து கொண்டது. தற்போது ஐந்தாண்டுகளுக்குள் அகதிகளை திருப்பி ஏற்றுக் கொள்வதற்காக வியட்னாமிற்கு தொடர்ந்தும் ஜேர்மன் உதவி வழங்கும். இது வருடாந்தம் 65 மில்லியன் டொலர்களாகும். இதைப் போன்று இலங்கையில் நிலைமை சுமுகமானதும் பலர் திருப்பி அனுப்பப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பிரபா-சந்திரிகா நேரடித் தொடர்பு

பிரபாகரனுக்கும் சந்திரிகாவுக்கும் இடையில் நேரடி வானொலித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டிப்பதாக அரசசார்புப் பத்திரிகையான சண்டே ஒப்சேர்வர் தெரிவித்திருக்கிறது.

# நினைவஞ்சலி

## பாலசுப்பிரமணியம் (கபூர்)

தோற்றம்:1965

மறைவு: 1986 தை
(திகதி தெரியாமல் முகம் தொலைத்தவன்)

கொழும்பு றோயல் கல்லூரி மாணவனும் மருத்துவக் கல்லூரிக்கு தெரிந்தெடுக்கப்பட்டும் அந்த வாய்ப்பை உதறி விட்டு மக்களிற்கும் மண்ணிற்குமான தனது பங்களிப்பை ஆற்ற செயற்பட்டவன். சக இயக்கம் ஒன்றால் ஈ.பி.ஆர்.எல்.எவ்க்கு எதிரான வன்முறை ஆரம்பித்த போது ஆற்றல் நிறைய இருந்தும் சக தமிழனுக்கு எதிராகப் போராடுவதை தவிர்த்தவன். பின் கைது செய்யப்பட்டு விசாரணை என்ற பெயரில் கோழைத்தனமாகக் கொல்லப்பட்டவன். அவனது தம்பியும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்க வாய்ப்பிருந்தும் தம்பி என்ற ஒரே காரணத்திற்காக கொல்லப்பட்டவன். அதன் பின் அவனது குடும்பம் அழுவதற்கும் உரிமை மறுக்கப்பட்டு யாழ்.குடாநாட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்டனர்.

மக்களின் நலனை மனதில் கொண்டவர்கள், மண்ணின் வளமான எதிர்காலத்திற்காக தமது சொந்த வாழ்வின் வசந்தங்களை உதறியவர்களிற்கு துரோகி என்ற பெயரும் அவர்களைக் கோழைத்தனமாகக் கொல்பவர்கள் தமது சொந்த இருப்புக்காக மக்களையும் மண்ணையும் பணயம் வைப்பவர்கள் மாவீரர்கள் என்பதும் சரித்திரமாகும்?

**நண்பர்கள்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# GOOD BYE BALDNESS

## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி




## ஒரு சிறு குமிழ் உங்கள் கேசத்தை வளரச் செய்கிறது

இந்த சிவப்பு நிறக் கிழங்கு இரத்த ஓட்டத்தை கூட்டுவதன் மூலம் மயிர் கொட்டுவதைக் குறைத்து புதிய மயிர் வளர்வதற்கு உதவுகிறது. தலைமயிர் உதிர்வது பரம்பரையானது அல்ல. ஆண்களின் உடலில் தெஸ்தஸ்தரோன் அதிகமாகச் சுரப்பதால் இரத்த ஓட்டம் குறைகிறது. பெண்களில் அழுத்தம் காரணமாக இரத்த ஓட்டம் குறைகிறது. இருபது வருட ஆராய்ச்சியின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு ஐயாயிரம் பேருக்கு மேல் பரீட்சிக்கப்பட்டது இந்த குமிழ்.

**Tel:922-0478**
239 Carlton St
Toronto, Ont

# சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!
# Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




***VITAMOL*** சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ரொபேட்டினால் தயாரிக்கப்பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.


## NERVOGEN NERVE FOOD




உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.


அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.

**Universal Foods & Merchandise Co,**
**Toronto, Canada**
**(416) 535-8672**




## CHATAK: CURRY EXCELLENT

**Chatak Madras Curry Powder** இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது. **Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix** போன்றனவும் கிடைக்கும்.




## DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ரொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினால் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

**BUDGET SUPERSAVINGS DISCOUNT**
**1340 Queen st west (East of lansdowne)**
**Tel:(416) 537-0394**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


ஸ்காபரோ பல்வைத்திய நிலையம்

# Scarborough Dental Office

## Dr.Athi K.Somasundaram

## டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி,
கனடா தேசிய பல்வைத்திய சபை




- Gum Treatment
- Root canals
- Crown & Bridges
- Cosmetic Dentistry
- Bleaching
- Dentures
- Surgery

திங்கள் முதல் சனி வரை
காலை 9- மாலை 9வரை
ஞாயிறு தினங்களில்
நண்பகல் 12 - மாலை 5 வரை
(ஞாயிறு தினங்களில் சேவையைப் பெற்றுக் கொள்ள முன்னறிவித்தல் செய்து கொள்ளுங்கள்)

★ 24 மணி நேர
அவசர சிகிச்சை சேவை

★ அவசர சிகிச்சைகளுக்கு முன்னறிவிப்பு இன்றி சிகிச்சை வழங்கப்படும்


★ அழகுபடுத்தும் பற்சிகிச்சைகள்

★ காப்புறுதித் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

★ சமூக உதவிப் பணம் பெறுபவர்களுக்கும் சிகிச்சை வழங்கப்படும்

**Tel:(416) 750 9969**
**Fax:(416) 750-9967**
**2155 Lawrence Ave East,**
**Suite 10**
**(At Birchmount),**
**Scarborough**

- Wheel Chair Access
- Free Parking




**Monday-Saturday**
**9 AM-9 PM**
**Sundays**
**12 noon-5 PM**
Sunday by appointment only
24 Hrs Emergency Service

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

## பொங்கு தமிழர்க்கு இன்னல் விழைந்தால்..

தஞ்சையில் களியாட்டம் பார்க்கப்போன நமது தமிழர் அவமானப்பட்டுத் திரும்பியிருக்கிறார்கள்.
எப்படிப் போனார்கள், எங்கு தங்கினார்கள், எப்படித் திருப்பி அனுப்பப் பட்டார்கள் என்று வர்ணனைகள் வேறு. ஏன் போனார்கள் என்பதற்கு மட்டும் விடையில்லை.
நாட்டை விட்டுப் புறப்படு முன்னரே இவர்களது சகாக்களுக்கு, நமது தமிழர்களுக்கு நமது மண்ணில் வைத்தே அவமானம் நிகழ்ந்திருக்கிறது. அதற்குப் பிறகும் இவர்கள் போயிருக்கிறார்கள்!
இதற்குப் பெயர் தான் சுயநலமென்பதா?

சசிகலா அமர்கின்ற கன்னித்தாய் மடியில் கலாநிதிகளுக்கு இடமில்லை என்று இப்போதாவது இவர்களுக்குப் புரிந்திருக்கும். கூவம் நதிக்கும் கூத்திகளுக்கும் வித்தியாசம் இல்லை என்று பாவம் இந்தப் பேராளர்களுக்குப் புரிந்திருக்கவில்லை. கண்டவர் எல்லாம் கழிவகற்றும் இடத்தில் கனகாபிஷேகத்தை யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள்.
இவர்கள் அவமானப் பட்டதற்காக ஈழத்தமிழர் வருந்தவேண்டியிருக்கிறது.
தமிழ் நாட்டில் தமிழுக்குப் பஞ்சமில்லை. தமிழருக்குத் தான் பஞ்சம். அறுபது மில்லியன் முட்டாள்களை ஒரே இடத்தில், அதுவும் மிக மலிவாக, பெறற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம் தமிழ்நாடாகத் தானிருக்கவேண்டும் போலிருக்கிறது. இல்லாவிட்டால் ஆட்சியை மீண்டும் மீண்டும் முட்டாள்களின் கையில் ஒப்படைப்பார்களா?.

களியாட்டம் கோலாகலமாக நடந்தேறியதாம். முட்டாள்கள் முழுநீள ஊர்வலம் போனார்களாம். அம்மன் கோவில் முன்றலில் மட்டும் கொஞ்சம் ஆரவாரம் காட்டிவிட்டு, சசிகலா பிரகாரத்தில் கொஞ்சம் சலசலப்புச் செய்து விட்டு முட்டாள்கள் மூச்சின்றிப் போன விவகாரம் தமிழ் ஆராய்ச்சியின் பெரியதொரு மைல் கல்லாம்! புலி வேடம் பூண்ற அமைச்சரொருவரைச் சங்கிலியால் பிணைத்து அம்மன் முன் இழுத்து வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியென்று முட்டாள்கள் மகிழ, 'இது பாயும் புலியல்ல அம்மன் முன் பதுங்கும் புலியென்று' மாண்புமிகு முடடாள் வாரிய அமைச்சர் முழங்கிக் கொள்ள, ஆஹா ! ஒரே அட்டகாசமாம் போங்கள்!. என்னே தமிழ் ஆராய்ச்சி!

இவர்களெல்லாம் நாகரீகமடைய எத்தனை யுகங்கள் கழியவேண்டுமோ!
இதிலிருந்து நாங்கள் கற்கவேண்டியது நிறையவிருக்கிறது. எத்தனை சிங்களத் தலைவர்களை நாங்கள் அவர்கள் தெருக்களில் வைத்துச் சங்காரம் செய்திருப்போம். அப்படியிருந்தும் அதே சிங்களவர்களிடம் எந்தவித பிரச்சினையுமின்றி அனுமதி பெற்றுக் கொண்டு எங்கள் பேராளர்கள் தமிழ்நாடு போக முடிந்தது. தமிழர்களால் மட்டும் தமிழர்களுக்கு அனுமதி கொடுக்க முடியவில்லை. தமிழருக்குப் பகைவர் என்றுமே தமிழர்கள் தான்.
பொங்கு தமிழர்க்கு இன்னல் விழைந்தால் சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு!
பாவம் அம்மையார்!

**சிவதாசன்**




## நேற்று இன்று நாளை

சென்ற வாரம் ஒரு தமிழ்ப்பத்திரிகையில் இது வாசித்தேன். பலவிடங்களிலும் பயணம் செய்த ஒரு வயோதிபர் ஈழம் திரும்பியதும் எழுதிய ஒரு புத்திமதி.

அரைத்ததை மீண்டும் அரைத்து அரைத்து திண்மம் திரவ நிலை கடந்து வாயு நிலைக்கு வந்தது போன்ற நிலை.

ஈழத் தமிழரின் இன்றய நிலைக்கு பழைய தலைமைகள் தான் காரணமாம். நாளைய நிலைக்கு யார் காரணம் என்று இந்தப் புத்திமான் திருவாய் மலர்ந்தருளி விட்டுப் போனால் இவருக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும்.

அரசியலில் நேர்மையானவர்கள் குறைவு. ஆனாலும் அவர்கள் தேர்தலில் தான் நின்றார்கள். வென்றார்கள். ஒரு தடவையல்ல பல தடவைகள். இவர்களெல்லாம் தமிழர்களை ஏமாற்றிப் பிழைத்தவர்களானால் ஏமாற்றப் பட்டவர் எந்தரகத்தினர்? புகார் செய்யப்படுபவனை விடவும் புகார் செய்பவன் தான் மோசமானவன், எந்த வித இணக்கமற்ற சூழல்களிலும் வாழப்பழகிக் கொள்வது சூழலை இசைவாக்கி வெற்றி காண்பதற்கான முதல் படிதான். அவன் கள்ளன், இவன் பொய்யன், அவன் ஏமாற்றுக்காரன், இவன் கொலைகாரன் என்று சதா மற்றவர்களைக் குறைகூறிக் கொண்டிருப்பவர் வாழ்க்கையில் தோல்விகளையே சந்தித்துக் கொள்பவர் ஆவார்.

இன்றய நிலைமைகளுக்கு நேற்றய நிகழ்வுகள் தான் காரணமென்று தீர்ப்புச் சொல்வதற்கு மேதைகள் தேவையில்லை. மாற்றங்கள் வளர்ச்சியின் அறிகுறிகள். ஈழத்தின் இன்றய நிலைமைக்கு வித்திட்டவர்களே நேற்றய தலைவர்கள் தான். இன்றய நிலைமை நேற்றய நிலைமையை விடவும் நன்றாகவிருக்கிறது என்று இந்தப் பெரியவர் ஏற்றுக் கொண்டால் அதற்காக நேற்றய தலைவர்களுக்கு இவர் நன்றியுள்ளவராய் இருக்க வேண்டும்.
சரித்திரம் இவர்களைப் போன்றவர்களினால் எழுதப்படுவதனால் தான் பிரச்சினைகளே உருவாகிறது. பேசாமல் ஏதாவது உருப்படியாய்ச் செய்யுங்கள் பெரியவரே!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# பத்திரிகைத்துறையில் அவசரங்களா? அபசுரங்களா?

'இதோ, எமது கையில் பேனா இருக்கிறது. அது எதை எழுதுகிறதோ அதை வாசகன் வாசித்தே ஆகவேண்டும்: நம்பியே ஆகவேண்டும். அது மட்டுமல்ல மெச்சவும் வேண்டும்'

பொதுவாகப் பல எழுத்தளர்கள் (எழுதுபவர்களில் ஒருவனாக நானும் அதில் அடங்கலாம்), பல பத்திரிகைகள் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவதானமாக வாசிக்கும் ஒரு வாசகன் நிச்சயமாக உணருவான். வாசகன் என்ற நிலையில் கடந்த வருட (ரொரன்ரோ) தமிழ் பத்திரிகை உலகை ஒரு நோட்டம் இட விழை கையில் 'கண்ணால் காண் : தீர விசாரி : ஆனால் எதையும் எழுதாதே' என்ற ஒரு மிரட்டல் அசாரீரியாக எங்கேயோ கேட்கிறது.

'நாம் ஒன்று நினைக்க' என்ற தலைப்பில் சுமார் அறுபது வருஷத்துக்கு முன்னர் வந்த பத்திரிகை ஒன்றில் (செந்தமிழ்ச் செல்வி அல்லது கலைமகள்?) ஒரு நகைச்சுவைப் பகுதி ஒன்று. அதில் பத்திரிகைக்காரர் ஒரு தலைப்பைக் கொடுத்துப் படம் கீறச்சொல்ல ஓவியர் அதே கருத்தை வேறுவிதமாக விளங்கி நகைச்சுவையான படம் ஒன்றைக் கீறிவிடுவார். எழுதுபவர் எதையோ நினைத்துக் கொண்டு எழுத, பிரசுரிப்பவர் எதையோ விளங்கிக் கொண்டு பிரசுரிக்க, வாசிக்கும் நாங்கள் வேறு எதையோ அதில் காண்கிறோம் என்பதைப் பத்திரிகைக்காரர் புரியவேண்டும். எழுத்தாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். அதை வலியுறுத்துவதே இக் கட்டுரையின் நோக்கம். இப்படி எழுதுவதால் நானோ அல்லது இதைப் பிரசுரிக்கும் தாயகம் பத்திரிகையோ 'இவ்விஷயத்தில் சுத்தமானவர்கள்' என்று உரிமை கோரிக்கொள்ள முடியாது.

ஒரு பத்திரிகையின் தரம் எதில் தங்கியுள்ளது. அச்சடிக்கும் எண்ணிக்கையில்? விற்பனையாகும் எண்ணிக்கையில்? அப்படித்தான் எம்மில் பலர் நினைக்கிறோம். அப்படிப் பார்த்தால் 'பருவகாலம்' கலைமகளையே மிஞ்சிவிடலாம். பொதுவாக பத்திரிகை ஒவ்வொன்றும் தாமே முன்னணியில் நிற்பதாகவும் தமது பத்திரிகையே அதிகம் விலைப்படுவதாயும் கூறிக்கொள்வது சில காரணங்களுக்காக. ஒன்று விளம்பரதாரர்களை நம்பவைத்து விளம்பரங்களை தமது திசைக்குத் திருப்புவதற்காக. மற்றது விற்பனையில் அதிகமாதலினால் தமது பத்திரிகையே மக்களுக்குத் தேவையான விஷயங்களைத் தாங்கி வருகின்றது என்ற பிரமையை உருவாக்க. இவ்வகையான விளம்பரங்களைப் பொதுவாக எல்லாப் பத்திரிகையும் செய்வது வழக்கம். அவ்வாறு ஏற்படுத்தப்படும் 'பிரமைகள்' பத்திரிகை நிலைத்து நிற்பதற்கு தேவையான நிர்ப்பந்தங்கள். வியாபார யுக்திகள். ஆனால் பொதுமக்களும் விளம்பரதாரர்களும், அதிகமாக வாசிக்கப்படும் அல்லது விற்பனையாகும் பத்திரிகை எது என்பதில் குழம்பியிருப்பார்கள்.

விளம்பரதாரர்களுக்கு இவ்விஷயம் முக்கியமானதுதான். ஆனால் பொதுமக்களைப் பொறுத்தவரையில் விற்பனையில் எது அதிகம் என்பதிலும், 'தேவையான' விஷயத்தில் எது அதிகம் என்பதே முக்கியமானது.

பொதுமக்களுக்குத் தேவையான விஷயத்தைத் தர பத்திரிகைகள் எவ்வளவுதூரம் முயற்சி செய்கின்றன என்பதை ஆராய்வது தகுதிக்கு மேலான ஆராய்ச்சி. 'தேவை அற்ற அல்லது தனிப்பட்ட விஷயம்' என பல வாசகர்களால் கருதப்படக்கூடியவற்றைத் தருவதில் ஏன் இந்த முனைப்பு என்பதைச் சிந்திப்போம்.

'தாயகம்' சஞ்சிகையில் அவ்வப்போது வரும் சில விஷயங்கள் வாசகர்கள் பலரை முகம் சுளிக்க வைத்திருக்கிறது என்பது கசப்பான உண்மை.. பொதுவாழ்க்கையில் தனி மனிதர்களின் 'தனிப்பட்ட குணாதிசயங்கள்' பற்றிய கணிப்பீடு முக்கியமாக அமைகையில் அவை பற்றிய கருத்துரைகள், 'நாகரீகமான' கிண்டல்கள் தேவைதான். அதில் பொதுமக்கள் நன்மையும் பெறுவார்கள். ஆனால் ஒரு பொது நம்பிக்கையில் (சிலரின் பார்வையில் அது தவறானாலும் கூட) கிண்டல் செய்யும் போது, அது பல பொதுமக்களின் மனதைப் புண்படுத்தும் அல்லவா? அதை ஏன் தாயகம் சரியான வகையில் அணுக நினைக்கவில்லை? நான் இங்கு குறிப்பிடுவது புலிகள் பற்றி சில சமயங்களில் வரும் 'மீறிய' கிண்டல்கள் பற்றி....

கடற்கரை ஓரமாக தாயும் குழந்தைகளும் நடந்து கொண்டிருக்கிறார்கள். காற்றுப் பலமாக வீசுகிறது. அந்தத் தாய் அணிந்திருந்த பாவாடை மேலே கிளம்பி ..... . தூரத்தில் வரும் இளைஞர்கள் அதைப் பார்த்து 'ஜாடை'யாகப் பேசி சிரிக்கிறார்கள். அப்போது அந்தத் தாயின் மனம் என்ன வேதனைப்படும்? அந்தக் குழந்தைகளின் கண் சிவக்காதா ? அது போல ..... . நன்மை பயக்காதவிடத்து 'அளவுக்கு மீறிய' கிண்டல்களைத் தவிர்ப்பதால் தாயகம் எதையும் இழந்துவிடப்போவதில்லை. உண்மையை எழுதலாம் அது தண்மையாய் அமையும் வகையில்.

'பத்திரிகைத்துவத்துக்கு' அமைவில்லாத சொற்றொடர்கள், முரண்பாடுகள் போன்றவை சில கட்டுரைகளுக்குள் ஊடுருவி இருந்தமையையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எனது ஆக்கத்திலும் இருந்ததாக சிலர் கருத்துத் தெரிவித்திருந்தனர். சில விஷயங்கள் எமது

**சிவப்பிரகாசம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

பார்வையில் சுத்தமாக இருக்கும். ஆனால் தூரத்தில் இருந்து பார்க்கும்போதுதான் அதில் உள்ள கோணல்கள் தெரியும். இவ்வாறான கோணல்கள் கண்ணுக்குத் தெரியாமல் போவதற்கு ஒரு காரணம் அவசரம்.

பரவலாக அலசப்படும் அடுத்த பிரச்சனை இலவசப் பத்திரிகைகள் பற்றியது. பத்திரிகை இலவசமாக வெளிவந்தால் அவை தரத்தில் குறைந்திருக்கும் என்பது புதிய கண்டுபிடிப்பாக உள்ளது. அவ்வாறானால் தரம் என்பது விலைக்கு நேர்விகித சமமா?(விலைகூட தரம் கூடுமா?). இலவசமாக வரும் பத்திரிகை தமக்கு ஒரு விலையை நிர்ணயித்தால் தரம் தானே உயர்ந்து விடுமா? ஆடம்பரப் பொருட்களை வாங்கும் போது . விலை அதிகமானதை வாங்கி வைத்திருப்பது தமது மதிப்பை உயர்த்தும் என்பதால் .....அவ்வகையில் அந்தப் பொருட்களுக்கு கேள்வி(டிமான்ட்) அதிகம் என்பது சமூகவியல் கருத்து. ஆனால் பத்திரிகை என்பது ஆடம்பரப் பொருளா? இங்கு வரும் இலவசப் பத்திரிகைகளுக்கும் மற்றவைகளுக்கும் பொருளடக்கத்தில் என்ன அப்படி வேறுபாடு. இலவசப் பத்திரிகைகளுக்கு வக்காலத்து வாங்க இதை எழுதவில்லை. ஏற்றுக் கொள்ள முடியாத காரணங்களை முன்வைத்து பத்திரிகைகள் மற்றவற்றை தாழ்த்த நினைப்பது வியாபாரத்துறையில் நேர்மையானதாக இருக்கலாம். ஆனால் வாசகர்களை முட்டாள்கள் எனக்கருதுவது வாசகர்களை அவமதிப்பதாகும். இலவசப் பத்திரிகைகளை பலர் எதிர்ப்பதற்கு காரணம் இருக்கிறது. அதை நேரிடையாக தெரிவிப்பதில் என்ன சிக்கல் ? அந்த உண்மை இதுதான்.

பத்திரிகை ஒன்று இலவசமாக வரும் போது, மற்றப் பத்திரிகைகளின் விற்பனை வெகுவாகப் பாதிக்கப்படும்.

> பத்திரிகை இலவசமாக வெளிவந்தால் அவை தரத்தில் குறைந்திருக்கும் என்பது புதிய கண்டுபிடிப்பாக உள்ளது. அவ்வாறானால் தரம் என்பது விலைக்கு நேர்விகித சமமா?(விலைகூட தரம் கூடுமா?). இலவசமாக வரும் பத்திரிகை தமக்கு ஒரு விலையை நிர்ணயித்தால் தரம் தானே உயர்ந்து விடுமா?

செலவினங்களைக்குறைத்து விளம்பரங்களை அதிகரித்து குறிப்பிட்ட தொகையை இலாபமாகக் கொள்ளக்கூடிய வசதி பத்திரிகை எல்லாவற்றுக்கும் உண்டு எனச் சொல்லமுடியாது. அவ்வாறு செய்வது எதிர்கால பத்திரிகை வளர்ச்சிக்கும் ஆரோக்கியமானதல்ல. பத்திரிகைத்துறை என்பது ஒரு வியாபாரத்துறையும்கூட. அது சேவை நோக்கத்துக்காக மட்டும் இயங்குகின்றது என்றால் அது 'நம்புவதற்கு கஷ்டமானது'. வியாபாரத்தில் நன்மையைப் பெற இலவசமாகக் கொடுப்பது ஒரு யுக்தி என்றால் ..... இலசவப் பத்திரிகைகளை விழுத்துவதற்காக அவை தரம் குறைந்தனவென்றும் மக்களால் புறக்கணிக்கப்படுகின்றன என்றும் பிரச்சாரம் (உண்மையோ–பொய்யோ)செய்தால் என்ன தவறு என்று மற்றப் பத்திரிகைகள் கேட்பதில் வியாபாரரீதியில் குற்றம் சொல்வது முடியாது. ஏனென்றால் வியாபாரத்தில் 'சில தர்மங்கள்' அடிபட்டுப்போகின்றன. ஆனால் விஷயம் அறிந்த பாவனையாளர் பலரின் கருத்துப்படி,

'இலவசமாக பத்திரிகை கிடைப்பது நல்ல விஷயம். ஆனால், இதனால் இலவச பத்திரிகைளும் பெரிய நன்மை(இலாபம்) அடையப் போவதில்லை. மற்றப் பத்திரிகைகளின் உற்சாகம் குறையலாம். புதிய இலக்கியப் பத்திரிகைகளைப் பிரசுரிக்க விரும்புபவர்களும் அந்தத்துறையில் இருந்து பின்னடிக்கலாம். இந்த இடைவெளி அதிகரித்துக் கொண்டே போக, சமய – இலக்கிய – கலாச்சார எழுத்துக்கள் படிப்படியாய் மங்கி வெறுமனே விளம்பரங்கள் மட்டுமே இலக்கியமாக அமையும் சந்தர்ப்பம் வரலாம்' என்று அச்சம் தெரிவித்தனர். வியாபாரம் என்பது கனடாவில் தமிழன் நிலைக்க உதவி புரிந்துவிட்டு தமிழ் பண்பாடு கலாச்சாரம் என்பவற்றை எம்மிடம் இருந்து பிரித்துவிடுமோ என்பது அலட்சியப்படுத்த முடியாத அச்சம் என்பதை முற்றாக மறுக்கமுடியாது. தமிழைத் தமிழாக வளர்க்கும் தகைமை கொண்டவர்கள் அடுத்த தலைமுறைக்கும் செல்ல வேண்டுமானால் இலக்கியத்துறையில் இடைவெளி ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதேநேரம் வேறுசிலரின் கருத்துப்படி, 'எதையுமே இலவசமாகக் கிடைக்கும் போது அதைப் பிரயோசப்படுத்த முயல்வது மனித இயல்பு. இலசவமாகக் கிடைப்பதால் , தமிழையை வாசிக்க மறந்திருந்த எத்தனையோ பேர் , வாசித்துக் கொண்டு பயன்பெறுகின்றனர். அதனால் ஓரிரு பத்திரிகைகளாவது இலவசமாய் வருவது நல்லது' என்று கருதுகின்றனர்.

ரொரன்ரோவில் இருந்து வரும் சில பத்திரிகைகளில் தனி நபர்களைத் தமது சொந்த விஷயங்களுக்காக கொச்சைப் படுத்தி எழுதுவது அண்மைக்காலமாக தொடருகிறது. அவற்றைப் பத்திரிகை ஆசிரியர்களும் 'காணாதது' போல் இருந்து விடுகின்றனர். தவறுகளைச் சுட்டிக் காட்டும் போது, அதை நாகரீகமாகச் செய்வதால் என்ன குறைந்துவிடும்.

இவைகள் பலவற்றுக்கு முக்கிய காரணம் அவசரம். பத்திரிகைத்துறையில் உள்ளவர்களும், எழுத்தாளர்களும் பல சந்தர்ப்பங்களில் அவசரமாகவே தமது ஆக்கங்களைப் பிரசவிக்கிறார்கள். அதனால் எழுதியவற்றை மீளப் படிக்கவே முடியாத சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றது. ஆத்திரத்தில் எழுதிய விஷயங்களை பின்னர் ஆற அமர்ந்து யோசித்து திருத்த முன்னர் பத்திரிகை வெளிவந்துவிடும் இயந்திர உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதன் காரணங்களால் அநாகரீகங்கள் ஆக்கிரமிக்கும் கவலைக்கிடமான நிலையில் எழுத்துத்துறை செல்வதுபோல் தெரிகிறது.

அடுத்த காரணம் சுயகௌரவம். 'செய்துவிட்டோம் . அது சரி என்றுதான் வாதாடுவோம். எம்மில் தவறுகாண இடம் கொடுக்கக் கூடாது' என்ற மனப்பான்மை. சற்று விலகி, நாம் செய்பவற்றையே மற்றவன் எம்மேல் செய்துவிட்டான் என கற்பனை செய்து பார்ப்பின் , எமது சுட்டுவிரல் எம்மையே காட்டி நிற்கும் அற்புதத்தைக் காணலாம்.

இவாறாகப் பலவும் பல பத்திரிகைகளில் .... . இவை எனதும் என்போன்ற பல வாசகர்களினதும் கருத்துக்கள். புறக்குடத்து நீரானால் என்ன – செவிடன் காதில் ஊதிய சங்கானால் என்ன. சர்வாதிகாரம் என்பது தற்கால நாகரீகமாக எத்தனிக்கும் இந்தக் காலத்தில் புரட்சி என்பதும் மறந்துவிடப்படாத ஒன்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பல்லி



## சிறுகதை

வ.ந.கிரிதரன்

வெளியில் வானமிருண்டு கொட்டிக் கொண்டிருந்தது. அதிகாலை தொடங்கிய மழை தொடர்ந்தபடியிருந்தது. 'வேலையா வெட்டியா' படுக்கையில் புரண்டபடியிருந்தேன். நினைவு முழுக்க மனோரஞ்சிதமே மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருந்தாள். 'ஈர்ந்து நிலம் தோயும் இரும்பிடித் தடக்கையின் சேர்ந்துடன் செறிந்த குறங்கு' வாய்ந்த பேரழகி அவள். அவள் குறங்கின் அழகில் கிறங்கித் தானே அவள் பின்னால் அலை அலையென்று அலைந்து.. அது பழைய கதை.

கவனம் சுவரில் ஓடிக் கொண்டிருந்த பல்லியின் மேல் திரும்பியது. ஊரில் என்றால் பல்லிகளுக்குக் குறைச்சலேயில்லை. பல்லி முட்டைகளையும் அறுந்த பல்லி வால்களையும் பார்ப்பதென்பது சர்வசாதாரணம். மழைக்காலத்து இரவுகளில் சுவரில் பூச்சி பிடிக்கும் பல்லிகளைப் பார்த்தபடி எத்தனையோ தரம் தூங்கிப் போயிருக்கிறேன். இங்கு பல்லிகளை இதுவரை நான் கண்டதேயில்லை. கனடாச் சுவாத்தியம் பல்லிகளுக்கு ஒத்து வருவதில்லையோ என்று எண்ணுவதுண்டு. கனடா வந்ததிலிருந்து இதுவரை காலமும் தொடர்மாடிக் கட்டடங்களில் தான் வாசம் செய்து கொண்டிருந்தேன். அண்மைக் காலமாகத் தான் தமிழ்க் குடும்பம் ஒன்றின் 'பேஸ்மெண்ட்' அப்பார்ட்மென்ற் கிடைத்திருந்தது. ஒருவேளை வீடுகளில் பல்லி


| |
|---|
| **Books,**<br>**Flyers,**<br>**Business Cards,**<br>**Wedding Cards** |

**Blue Line Printing**

கண்ணைக் கவரும் வண்ணங்களில்
தரமான அச்சுவேலைகளுக்கு..

| **1000** | | |
|---|---|---|
| | FLYERS | $21 |
| | ENVELOPES | $35 |
| | BUSINESS CARDS | $30 |
| | LETTERHEADS | $25 |

**Tel:299 5979**
**Fax:299 8171**

**335 Nugget Ave, Unit 6**
(McGowan/Sheppard)
Scarborough




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

வாழ்வதற்கான சூழ்நிலே இருந்திருக்கக் கூடும். வேறுபல காரணங்களும் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லாமலில்லே. இங்கு அப்பாட்மென்டிற்கு அப்பாட்மென்ட் பூச்சிகளேக் காவிக் கொண்டு போவது போல யாராவது ஊரிலிருந்து பல்லி முட்டைகளேயும் காவி வந்து விட்டிருக்கலாம். இல்லாவிட்டால் போர்ச் சூழலின் உக்கிரம் தாங்க முடியாமல் பல்லிகளும் அகதிகளாகப் படையெடுத்திருக்கலாம். இது தவிர இன்னுமொரு காரணமும் இருந்திருக்கக் கூடும். நானிருந்த வீடு அமைந்திருந்த பகுதி, மோர்னிங் சைட்டிற்கு அண்மையில். ரொறன்ரோ மிருகக் காட்சிச் சாலேயிருந்த பிரதேசத்தை அண்டிக் கிடந்தது. அங்கிருந்தும் பல்லிகள் புலம் பெயர்ந்திருக்கக் கூடும். 'தப்பிப் பிழைத்தலில்' ஏற்கனவே சாதனே புரிந்த பல்லிகளேயிட்டு நான் சில சமயம் பெருமைப்படுவதுண்டு. மில்லியன் வருடங்களாக பூமியை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த டைனேசர்களேயே அழித்த ஊழித் தாண்டவத்திலிருந்து தப்பிப் பிழைத்து சாதனே புரிந்த உயிரினமல்லவா?

மீண்டும் கவனம் பல்லியின் மேல் திரும்பியது. இருந்தாற் போலிருந்து எங்கிருந்தோ வந்து பூச்சியொன்று சுவரிலமர்ந்தது. அந்தப் பூச்சியின் மேல் அனுதாபமும் ஆத்திரமும் கூடவே தோன்றின. மடப்பூச்சியே.. இந்த பெரிய பிரபஞ்சத்தில் இருப்பதற்கு எவ்வளவோ இடமிருக்க போயும் போயும் அமர்வதற்கு இந்த இடமா உனக்கு கிடைக்க வேண்டும்? என் நினேவோட்டம் முடிவதற்குள் அப்பூச்சியை கபளீகரம் செய்து விட்ட பல்லி தன் நாக்கைச் சப்புக் கொட்டுக் கொண்டிருந்தது. சிறிது நேரம் உண்ணுவதில் கவனத்தை திருப்பியிருந்த பல்லி அலுவல் முடிந்ததும் பழையபடி இரையை எதிர்பார்த்தபடி காவலிருக்கத்தொடங்கியது. இந்தச் சமயத்தில் தனித்திருந்த அந்தப் பல்லியின் வாழ்வில் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. சுவரின் மூலேயிலிருந்து ஒரு பல்லி எட்டிப் பார்த்து தயங்கியபடி வந்து கொண்டிருந்தது. இரண்டாவது பல்லியைக் கண்டதும் முதலாவது பல்லியின் உடம்பு தினவெடுப்பதை என்னுல் அவதானிக்க முடிந்தது. வந்தது பெண்ணுக இருக்க வேண்டும். பல்லியை அவதானித்துக் கொண்டிருந்த எனக்கு சுவாரஸ்யம் ஏற்பட்டது. கதைக்கு கருவைத் தேடிக் கொண்டிருந்த எழுத்தாளன் ஒருவனுக்கு கரு கிடைத்து விட்டதைப் போன்ற உணர்வில் நான் இருந்தேன். சிறிது நேரம் இரு பல்லிகளும் ஒன்றையொன்று நோக்கியபடி இருந்தன. 'அண்ணலும் நோக்க, அவளும் நோக்க' நிலேயில் நின்ற பல்லிகளுக்கு இடையில் நானும் நோக்கிக் கொண்டிருந்தது தெரிந்திருக்க நியாயமில்லேத்தான். முதலாவது பல்லியை நோக்கித் தயங்கித் தயங்கி வந்து கொண்டிருந்த இரண்டாவது பல்லி ஒரு கணம் நின்றது. மறுகணம் வந்த திசைக்கு எதிர்ப்புறமாகத் திரும்பி நின்று வாலே அப்படியும் இப்படியுமாக ஆட்டியது. பல்லிகளேப் பொறுத்தவரையில் பெண் பல்லி ஆண் பல்லியை சரசமாட அழைக்கும் முறை இது தான் போலும். சிறிது நேரம் இவ்விதமாக வாலே அசைத்தபடியிருந்த பெண் பல்லியை நோக்கி ஆண் பல்லி ஓடத் தொடங்கியது. எனக்கு ஏனே தமிழ்ப் பட நாயக, நாயகியர் ஓடிப் பிடித்து காதல் செய்யும் ஞாபகம் தோன்றியது. இதிலும் 'கொப்பி' தானே? சிறிது நேரம் பெண் பல்லியைத் துரத்தி விட்டு களேப்பில் இருந்து விட்டு மீண்டும் துரத்துதலேத் தொடரும் ஆண் பல்லியை நினேக்கப் பாவமாயிருந்தது. வர்க்க உணர்வு போலும். ஆணே அலேக்கழித்துச் சாகசம் புரியும் பெண் பல்லியின் மேல் ஆத்திரம் ஏற்பட்டது. இவ்விதமாக பல்லிகள் இரண்டும் ஓடிப் பிடித்து விளேயாடிக்கொண்டிருந்தன. எவ்வளவு நேரம் தான் இப்படி விளேயாடப் போகின்றனவோ? 'கிளேமாக்ஸ்' காட்சியை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தேன். வெளியில் மின்னல் ஒன்று பளிரிட்டது. தொடர்ந்து பேரிடியொன்று கடகடத்தது. மழையின் உக்கிரம் கூடச் சிறிது கூடியிருந்தது. பல்லிகளின் நிலேயில் மாற்றமில்லே. திடீரென்று ஒரு சிறு மாற்றம், எங்கிருந்தோ வந்த பூச்சியொன்று பறந்து வந்து சுவரில் அமர்ந்தது. ஆண்பல்லியுடன் சரசமாடிக் கொண்டிருந்த பெண் பல்லியின் கவனம் சடாரென்று அதன் மேல் திரும்பியது. மறுகணம் ஆணுடனுன சரசத்தை நிறுத்திக் கொண்ட பெண் பல்லி சடாரென்று அந்த அப்பாவிப் பூச்சியின் மேல் பாய்ந்தது. பல்லிகளின் கூடலே எதிர்பார்த்து நின்ற எனக்கு சப்பென்றிருந்தது. எவ்விதம் இலகுவாக, விரைவாக அந்தப் பெண் பல்லி தன் உணர்வுகளே மாற்றிக் கொண்டது. இரையைச் சுவைத்துக் கொண்டிருந்த பெண் பல்லியை ஒரு வித ஆற்ருமையுடன் ஏக்கத்துடன் அந்த ஆண்பல்லி பார்த்துக் கொண்டிருப்பது போல பட்டது. பார்ப்பதற்கு பாவமாக இருந்தது.

'ஈர்ந்து நிலம் தோயும் இரும்பிடித் தடக்கையின் சேர்ந்துடன் செறிந்த குறங்கசை' நடை பயிலும் மனேரஞ்சிதத்தின் ஞாபகம் எழுவதை என்னுல் தவிர்க்க முடியவில்லே. (யாவும் கற்பனே)

---

*பல்லியைப் பற்றிச் சிலவரிகள்.....*

*வாசகர்களே! சிறுவயது முதலே எனக்கு இயற்கை நிகழ்வுகளே இரசிப்பதென்ருல் மிகவும் பிடித்தமானதொரு பொழுது போக்கு. கொட்டும் மழையை இரசிப்பது, விளக்கு நோக்கிப் படையெடுக்கும் ஈசல்களே இரசிப்பது, சுவர்ப்பல்லிகளே அவதானிப்பது இவையெல்லாம் எனக்குப் பிடித்தமானவை. 'பல்லி'களினுடனுன எனது அனுபவத்தை வைத்துப் 'பல்லி சொன்ன பாடம்' என்ருெரு சிறுகதையைக் கூட ஈழநாடு வாரமலரில் எழுதியிருந்தேன். அக்கதையின் குறை நிறைகளே விமர்சித்து இன்றைய விமர்சகர்களின் ஒருவரான புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் கூடப் பத்திரிகைக்கு கடிதமொன்று எழுதியிருந்தார். அதனே ஈழநாடு பிரசுரித்திருந்தது. அந்தப் 'பல்லி' சொன்ன பாடம் சிறுகதைக்கும் இந்தப் 'பல்லி'க்குமிடையில் கருவைப் பொறுத்தவரையில் நிறையவே வித்தியாசமுண்டு (பல்லியைத் தவிர) அக்கதையைப் பற்றிப் புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் குறிப்பிடும்போது, 'பல்லியைச் சொல்லிப் பாதையை மாற்றுகின்ருர் கதாசிரியர்' எனக் குறிப்பிட்டிருந்தார். இப் 'பல்லி'யில் அவ்விதம் நான் பாதையை மாற்றவில்லே.*

வ.ந. கிரிதரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net 

# ஒரு காதலன் படுத்திய பாடு

முத்துராசாவும் தங்கராணியும் ஈருடல் ஓருயிரான தம்பதிகள். வெல்பெயரில் காசு வருகிறது. காசு புழக்கம் அந்த மாதிரி இருக்கும் போது இருவருக்கும் இடையில் சண்டை வாறதே அபூர்வம். வீட்டில் நிக்கிற நேரங்களில் முத்துராசா ரீ.வியில் மல்யுத்தம் பார்த்துக் கொண்டிருப்பார்... செற்றியில் சாய்ந்தபடி வண்டியில் பியர் போத்தலுடன் மல்யுத்த வீரர்களுக்கு 'அடியடா, உங்காரடா பின்னால வாறான்' என்று ட்ரெயினிங் வேறு கொடுத்துக் கொண்டிருப்பார்.

தங்கராணியும் பிரச்சனை இல்லாத பேர்வழி. கடைக்குப் போய் ரேஸ்ட் பாணை வாங்கிக் கொண்டு வந்து, போன கிழமை காய்ச்சி, இப்போதும் பிரிட்ஜில் கிடக்கும் கோழிக் கறியை மைக்ரோவேவில் வைத்து சூடாக்கி கணவனுக்கு ஆசையுடன் பரிமாறி விட்டு, கொண்டு வந்த புதுப் படத்தைப் பார்த்துக் கொண்டிருப்பா. அல்லாவிட்டால், தனக்குத் தெரிந்த பெண்களிடம் போன் பண்ணி இன்றைய மார்க்கட் நிலவரம் என்ன என்று அறிந்து கொண்டிருப்பா. யார் யாரோட ஓடியிட்டினம், யார் மாடியில இருந்து விழுந்தது, அதற்கான காரணம் என்னவாக இருக்கும், இந்த மனிசனோடை பெரிய தொல்லையப்பா, இஞ்சேருமப்பா, மலர் அல்லே உம்மைப் பற்றி இப்படிச் சொன்னது, எனக்குத் தெரியும் தானே, மலரைப் பற்றி, அங்க வீட்ட வாற அந்தப் பெடியனோடை ஆடிக் கொண்டிருக்கிறது போன்ற முக்கியமான விடயங்களுடன் 'என்னவாம், ஊரில பெரிய பிரச்சனையாமப்பா, நான் அனுப்பின இருபது டொலர் கிடைச்சுதோ தெரியாது' என்று பேசி முடிப்பா.

இப்படி அவர்களின் வாழ்வு living happily everafter ஆகப் போய்க் கொண்டிருந்தது. 'அமைதியான நதி போல சஞ்சலமில்லாமல் தொடர்ந்த அவர்களின் பூப் போன்ற வாழ்வில் புயல் ஒன்று குறுக்கிட்டது'. அதற்கும் காதலன் தான் காரணம். தங்கராணி அப்படி ஒன்றும் நடத்தை கெட்டவ இல்லே.

நேற்று சுசீலாதேவி தான் காதலனை இவவுக்கு அறிமுகப்படுத்தி விட்டது. அதைக் கேட்டதிலிருந்தே அந்தக் காதலனை அடைய வேணும் என்பதில் குறியாக இருந்ததால், சீவி முடித்து சிங்காரித்து காதலனைக் காண வீடியோக் கடைக்குப் போனா. நீங்கள் நினைப்பது மாதிரி, யாராவது வீடியோக் கடைக்காரருடன் தங்காணிக்கு தொடர்பு என்று நினைத்தீர்களானால், நீங்கள் நாசமாய் போகக் கடவீர்கள

த.ராணி வாங்க வந்தது, காதலன் கசட். பிரபு தேவாவின் ஆட்டத்தைப் பற்றி சுசீலா மெய் மறந்து விபரித்த போது நம்ம 'கோல்ட் குயீனுக்கு' இருப்புக் கொள்ளவில்லே. ஒருமாதிரி கசட்டை வாங்கிக் கொண்டு, போன உடனே போட்டுப் பார்க்க வேண்டும் என்று ஓடோடி வந்த போது தான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

**பெண் சூரியன் குட்டிக் கதைகள்**

முத்துராசர் மல்யுத்தம் பார்த்துக் கொண்டிருந்தார். த.ராணிக்கு ஏறிக் கொண்டு வந்தது. ஒன்றுமே பேசாமல் கோழிக்கறியை சூடாக்காமலே போட்டு, பாணையும் கொடுத்து 'என்ன நெடுகத்தான் ரி.வி பார்க்கிறியள், உங்களுக்கு வேற வேலே இல்லேயோ?' என்று தான் கேட்டா.

இவ்வளவு நேரமும் பசி, அதை விட பியர் கொஞ்சம் ஏத்தம், அதைத் தான் பொறுக்கலாம் என்றால், மச்சோமானுக்கு மில்லியன் டொலர் மான் அடிச்சுப் போட்டான்... பின்னால வந்து தான், இந்த கடுப்பில இருந்த 'பேர்ள் கிங்'க்குக்கு, இதைக் கேட்டவுடன் ஏறிக் கொண்டு வந்தது. 'என்னடி வாய் நீளுது?' 'நீளாமல் என்ன செய்யும்?' போன்ற மயிர்க்கூச்செறியும் வசனங்களுடன் இறுதியில் சண்டைக்காட்சியில் முடிவடைந்தது.

த.ராணிக்கு வந்தது கோபம்.. உடனே அடித்தா 911க்கு. பொலிஸ் விண் கூவிக் கொண்டு வந்தது. அழுது கொண்டிருந்த த.ராணியை சாந்தப்படுத்திய பொலிஸ் மு.ராசாவை விலங்கு போட்டு ஊர்கோலம் போய் விசயம் கோட்டு வரை போய் விட்டது. இதன் பின்னர் தான் இரண்டு பேருக்குமே உறைத்தது. 'ஐயோ, என்ர தங்கத்துக்கு நான் கையை நீட்டினதால தானே இந்தக் கதி' என மு.ரா மனமுருக.. ஐயோ, நான் பொலிசுக்கு அடிச்சதாலே தானே என்ர ராசனுக்கு இந்தக் கதி' என்று த.ரா மனம் குமுற.. த.ரா அழுது குளறியதால் அவவின் தம்பி தங்கராசன் ஒரு லோயரைப் பிடித்து ஆளை வெளியில் எடுத்து விட... வெளியே வந்ததும் 'அத்தான், நான் தப்புப் பண்ணி விட்டேன், என்னை மன்னித்து விடுங்கள்' என்று த.ரா கதறியழ, 'கண்ணே, உன்னைக் கண் கலங்காமல் வைக்க வேண்டிய நானே உன்னைப் புண்படுத்தி விட்டேனே' என்று மு.ரா வசனம் பேச.. ஆமா.. இப்படியே பேசிக் கொண்டிருந்தால் எப்படி? என்னை எப்போது நீங்கள் மாமா ஆக்கப் போகிறீர்களாம்? என்று தங்கராசன் பேச. தமிழ் படம் மாதிரி கிளைமாக்ஸில் எல்லாம் இனிதே நிறைவேற, they were living happily everafter என்று நினைத்து சப்பென்று போயிருக்குமே.

அதுதான், இல்லே. இனிமேல் தான் கிளைமாக்ஸ்.. . இவ்வாறாக இருவரும் ஒற்றுமையான போழ்தில்.. பொலிஸ்காரரிடம் போய் நாங்கள் ஒற்றுமையாகி விட்டோம், வழக்கு வேண்டாம் என்று சொல்ல.. தமிழ் குடும்பங்களின் இந்த விளையாட்டை அறிந்த பொலிஸ் காரனோ.. உதெல்லாம் சரி வராது, உப்பிடி கனபேரை நாங்கள் கண்டிருக்கிறம், நீங்கள் அடிபடேக்கை ஓடி வரவும், சமாதானம் செய்யேக்கை விட்டுட்டுப் போகவும் எங்களாலே ஏலாது, நாங்கள் வழக்கைத் தொடரப் போறம் என்று சொல்ல..இப்போது இரண்டு பேரும் ஒன்றாக வெளிக்கிட்டு கோட்டுக்குப் போய் அங்கே இரண்டாகப் பிரிந்து வழக்காளி, குற்றவாளியாக கூண்டுகளில் ஏறி விட்டு ஒன்றாகவே திரும்பி வருகிறார்கள்.. லோயருக்கு கட்டுற காசுக்கு ஒரு சீட்டுக் கட்டலாமப்பா என்று பேசிக் கொண்டே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஷரியாக ஷொன்னல்

வடமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்தும் இடத்தில் அதிகளவு சிக்கல்களை உருவாக்கியுள்ள வட எழுத்து ஷ. இதற்குரிய ஒலி தமிழுக்கு முற்றிலும் அந்நியமானது. தமிழிலே ஷ,ஹ போன்ற எழுத்துக்கள் இல்லாமை மிகவும் நல்ல விஷயம் என்று மறைமலை அடிகள் எனப்படும் வேதாசலம் அவர்கள் முன்பு எழுதி வெளியிட்ட சிறு நூலில் 40 வருடங்கள் முன்பு கண்ட நினைவு. அவருக்குச் சுவாசம் தொடர்பான சில பிரச்சனைகள் சிறு வயதில் இருந்தனவாம். சமஸ்கிருதச் சுலோகங்களைப் பாராயணம் செய்வதை நிறுத்திய பிறகு எல்லாமே சரியாகி விட்டதாம். தமிழரே உலகத்தில் ஆரோக்கியமான இனமாக இருக்கிறதற்கான காரணத்தை அவர் எவ்வளவு எளிதாகக் கண்டு சொல்லிவிட்டார்! சிலரது தமிழ்ப் பற்று வைத்தியக்காரத்தனத்தின் எல்லையைத் தொடலாம் என்பதற்கு மறைமலை அடிகள் போன்றோரே சான்றாக இருக்கிறபோது சாமான்யர்கள் எம்மட்டு.

மறுபுறம் நெடுங்காலமாகத் தமிழ்ப்படுத்தப்பட்ட அயற் சொற்களுடைய மூல அயல் மொழி உச்சரிப்பை மீட்டெடுக்கும் மோகமும் சிலரிடம் உண்டு. இதன் பயனாகச் சில குளறுபடிகளும் நேருகின்றன. அண்மையில் எஸ்.பொ விடாப்பிடியாக குசினி என்பதைக் குஷினி என்று தனது நூலொன்றில் எழுதியிருந்தார். குசினி என்ற சொல் போர்த்துக்கேய மூலத்தை உடையதாயிருக்கலாம். அது குஷியான இடம் என்று எஸ்.பொ கருதிக் குஷினி என்று எழுதியிருக்கக்கூடும். அகஸ்தியரிடமும் இந்தப் பலவீனத்தைக் கண்டிருக்கிறேன். ஆயினும் டொமினிக் ஜீவாவுடைய கோபாவேஷம் என்ற சொல்லை மீற எதுவும் இல்லை. கோபாவேசம் என்று தமிழில் வழங்கும் இச் சொல்லில் 'ஷ'வைப் பிரதியிட்டு கோபம் போல வேஷம் போடுதல் என்ற பொருளில் ஒரு சொல்லை அல்லவா ஜீவா நமக்கு வழங்கிவிட்டார். இது போன்ற தவறான பிரயோகங்களை நாம் தவிர்ப்பது எளிது. தமிழ்ற பகுதியாகி விட்ட சொற்களை அவை தமிழ்ப்படுத்தப்பட்டு உள்ளவாறே எழுதி விட்டால் ஒரு சிக்கலும் இல்லை. அவ்வாறு தமிழாக்கப்படாத சொற்கள் விஷயத்தில் அயல் உச்சரிப்புக்கு நெருக்கமான முறையில் கிரந்த எழுத்துக்களது (ஹ,ஸ,ஷ,ஜ) உதவியுடன் எழுதலாம்.

ஷ தமிழுக்கு முற்றிலும் அயலானது என்பதால், மரபு அதைத் தமிழ்ப்படுத்தப் பயன்படுத்திய முறை, 'ஸ'வைத தமிழபபடுததப பாவித்ததை விட வித்தியாசமானது. ஷ என்ற எழுத்துப் பொதுவாக ட என்ற எழுத்தாற் பிரதியிடப்பட்டது. ஆயினும் ட தமிழ்ச் சொற்களின் முதலில் வர முடியாதாகையாற் சொல்லின் முதலிடத்தில் மட்டும் அது ச என்ற வடிவம் பெறும். உதாரணங்கள்:

ஷண்முகம்– சண்முகம்
ஷங்கர்– சங்கர்

விஸேஷம்– விசேடம்
துஷ்டன்– துட்டன்
விஷ்ணு– விட்டுணு (விட்ணு என வரமுடியாது)

சொல்லின் நடுவில் மெல்லின மெய்யை அடுத்து ஷ வரும் போதும் அது ச என்று அமைகிறது. உதாரணங்கள்.

இன்ஷூரன்ஸ்– இன்சூரன்ஸ்
அம்ஷத்கான்– அம்சத்கான் (அமிசத்துக்கான்)

ஷ என்ற எழுத்து எவ்வாறும் ஒலிக்கப்படாத பிதியீடுகளும் உள்ளன உதாரணங்கள்:

லக்ஷ்மணன்–இலட்சுமணன், இலக்குமணன்
வைஷ்ணவம்– வைணவம்

சொற்களின் முடிவில் வரும் ஷ், ட், என எழுதப்படுவதை மரபு அனுமதியாததால் அது சு என்று வருவதுண்டு.
உதாரணங்கள் :

மஹேஷ்– மகேசு
கணேஷ்–கணேசு

அண்மையிற் தமிழிற் புகுந்த சொற்களில் ஷ பொதுவாகவே ச என்ற எழுத்தாற் பிரதியிடப்படக் காணலாம் இதைவிட 'ட'வின் பிரயோகம் சில சங்கடங்களை உருவாக்கும் போதும் 'ச' விரும்பப் படுகிறது.
உதாரணங்கள்:

டெலிவிஷன்–டெலிவிஷன்
தமிழ்ப் பாஷை– தமிழ்ப் பாசை (பாடை அல்ல)
இன்ஷூரன்ஸ்– இன்சுரன்சு

விசேட, விஷயம் போன்ற சொற்களும் இன்று விசேச, விசயம் என்றவாறு வழங்கக் கேட்கலாம்.

'ஷ' தமிழர்கட்குத் தரும் பிரச்சனை அது மரபுத் தமிழுக்கு முற்றிலும் பரிச்சயமற்ற ஒலி என்பதனலாகாது. ஹ,ஸ,ஜ என்ற ஒலிகள் க,ச என்ற எழுத்துக்கள் வரும் இடங்களுக்கேற்ப (காகம், சஞ்சலம்) தமிழில் வருபவை. ஒத்த ஒலிப்புக் காரணமாக 'ஷ' 'ஸ'வுடன் குழப்பப்படுவது எளிது. இதன் விளைவாகவே சுரேஸ் (சுரேஷ்), கஸ்டம் (கஷ்டம்), புஸ்பம் (புஷ்பம்) போன்ற பிரயோகங்களை நாம் சந்திக்கிறோம். எனினும் 'ஷ' இன்று முன்னைவிட அதிகளவிற் தமிழர்கட்குப் பரிச்சயப்பட்டு வருகிறது இதை மூலத்தில் உள்ளவாறே சரிவர எழுதுவது சமகாலத் தமிழுக்குப் பொருத்தமானது. அதே வேளை ஷ, ஜ என்பன வரவேண்டிய இடங்களில் ஷ திணிக்கப்படுவது பற்றியும் வழக்கில் நிலைபெற்றுவிட்ட தமிழாக்கப்பட்ட சொற்களில் 'ஷ'வை வலித்து மீளப் புகுத்துவது பற்றியும் கவனமாயிருப்பது நல்லது.

**சி.சிவசேகரம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net 

சிறுகதை

# ஒரு கல்விமான் ஊர்வலம் போகிருர்



பாலசுந்தரன்

ஊர்வலம் படிப்படியாக அண்மிப்பதை அவள் உணர்ந்தாள். வீட்டுக்குள்ளே இருந்தபடி யன்னலினூடாக வீதியை பார்த்தாள். அவனின் இறுதி ஊர்வலம் வரை அவன் உடன் இருந்திருக்க வேண்டியவள் இப்போ வெறுமனே யன்னலினூடாக பார்க்கிருள். ஊர்வலம் மிகவும் அண்மிக்கிறது. அவளால் அவளை கட்டுப்படுத்த முடியவில்லை. கண்கள் கலங்குகின்றன. இப்போ அவளுக்கு பறைமேள சத்தங்கள் பிடிக்காதவை. இப்போ அது மிகவும் கொடூரம் பழையன மனதுள் புகுந்தன.

OL முடிவுகளில் பெரிய வித்தியாசம் இல்லாதிருந்ததால் AL படிக்கும் காலங்களில் பெரிய போட்டி இருவருள்ளும் நிலவியது. இருவருக்கும் மற்றவரை விட அதிகமாக செய்யவேண்டும் என்பதை விட மற்றவரைவிட குறைவாக செய்யக்கூடாது என்பது முதற் கொள்கையாக இருந்தது. அவர்களுள் இருந்தது போட்டியா? அல்லது காதலா? என்பது ஒரு குழப்பத்துக்குரியது.

எல்லோரும் பூமி தட்டையானது என்று கருதுகையில் அவன் மட்டும் பூமி உருண்டையானது என்பதை உறுதியாக ஏற்றுக்கொண்டான். வடக்கே உள்ள பாடசாலைக்கு போபவர்கள் எல்லோருமே வடக்கு நோக்கியே போவார்கள். இவன் மட்டும் தெற்கு நோக்கி போவான். அவன் வீட்டுக்கு சிறிது தெற்கே இவள் வீடு. அவள் வீட்டு அருகில் அவள் பஸ்தரிப்பு. அந்த தரிப்பை கடந்து வடக்கே உள்ள பாடசாலையை அடைவான். மாலையில் வீடு போகையில் எல்லோரையும் போல் அவனுக்கும் பூமி தட்டையாகிவிடும்.

அவனின் இந்த கொள்கைப்பிடிப்பு அவளுக்கும் தெரியும் ஆனுல் அவள் என்றைக்குமே அந்த கொள்கைக்கான கொள்கை விளக்கம் கேட்டதில்லை, அவனும் அந்த கொள்கையை விளக்கியதில்லை. இருவரும் ஒருவருடன் ஒருவர் கதைத்ததில்லை.

இயற்கையின் நியதிகளால் அவன் அவளை விட இரண்டு வருடங்கள் முன்னரே பல்கலைக்கழகம் சென்றுவிட்டான். இரண்டு வருடங்களில் அவள்மீது அவனுக்கு அனுதாபம் பிறந்தது. விடுமுறைகள் எல்லாவற்றுக்கும் புத்துணர்வுடன் ஊர் திரும்புவான். திரும்பியபின் முதல் வேலை அவளை காண்பதே, ஆனுல் கதைப்பது அல்ல. அதுவும் அவளுக்கு தெரியும். இந்த இரண்டு வருட நாடகம் முடிவுக்கு வந்தது. அடுத்த அத்தியாயம் தொடங்கியது.

அவரும் அவனின் பல்கலைக்கழகம் சென்ருள். "ருக்கிங்" அமுலுக்கு வந்தது. திருட்டு என்றே நம்மால் கருதப்படக்கூடிய இது வெள்ளையனிடம் இருந்து விளக்கம் தெரியாமல் எடுக்கப்பட்டு இசைவாக திரிக்கப்பட்டது. இதன் மூலம் இயலாதன அடையப்பட்டன. முடியாதன செய்யப்பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக கிடைக்காதன பெறப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

அவளை தாக்குவதற்கு "ருக்கிங்"கே அவனுக்கு ஆயுதம் ஆனது. கல்விமான்களால் கல்விமான்களுக்காக திரிக்கப்பட்ட கல்விமான்கள் சட்டம் அது. அவளும் இதை இயல்பாக உணர்ந்தாள். தாக்குதலில் இருந்து முடிந்தவரை தப்ப முயன்ருள் ஆனுல் என்றைக்கோ ஒருநாள் அது நடக்கும் என்பது அவளுக்கு தெரியும். ஒருமுறை பேராதனைக்கு போகும் போதே அவனிடம் தனிமையில் அகப்பட்டாள்

அவளுக்கு வியர்த்தது. இந்த 'அறிவு தொல்லை'யை முடித்து விடுவதும் நல்லம் போல் தோன்றியது. இதை கடக்காமல் பல்கலைகழகம் ஆரம்பிப்பது முறைமையில்லை என அறிந்திருந்தாள். தாக்குதலை, ஒரு பண்பான தாக்குதலை எதிர் கொண்டாள் அவன் நெருங்கினுன்.

"அந்த மரம் என்ன நிறம்" என்ருன்

"பச்சை"

"அந்த கார் என்ன நிறம்"

"சிவப்பு"

"உங்கடை தலைமயிர் என்ன நிறம்" என்ருள்

"கறுப்பு"

"இதெல்லாம் எனக்கும் தெரியும். பல்கலைக்கழகம் வந்த எனக்கு இதெல்லாம் தெரியாமல் விடாது. நான் இதை உம்மட்டை கேட்டது ஏனென்ருல் உமக்கு பார்வை குறைபாடு இருக்கோ என்று அறியத்தான் உமக்கு அப்படி ஒரு குறைபாடும் இல்லை என்று தெரியுது. இனி நான் கேட்கவேண்டிய கேள்வியை கேட்கலாம். " என்ருன் அவளுக்கு கொஞ்சம் குழப்பமாக இருந்தது. ஆனுலும் கேள்விதான், எதையாவது சொல்லிவிட்டாள் போச்சு என்று கருதினுள்.

"இப்ப சொல்லும்.......உனது யங்கி என்ன நிறம்" என்ருன்

அவள் கனத்தில் அழத்தொடங்கினுள். அழுகை அதிகரித்தது.

"ம்.........சொல்லும். இல்லாவிட்டில் நானே பார்க்கிறன். எது உமக்கு விருப்பமோ, உமது இஷ்டம்"

அவளால் அவனை புறக்கணிக்க முடியும் ஆனுல் தொடர்ந்தும் பல்கலைக்கழகம் செல்லும் எண்ணத்தை கொண்டிருக்கலாமா?

பல சொல்லியிருக்கிருர்கள். அது சாத்தியம் இல்லையாம். முன்னையோர் செய்வதை எல்லாம் செய்தாலொழிய படிப்பை தொடர முடியாதாம். அவளுக்கு படிப்பைவிட முடியவில்லை. நிச்சயமாக அவன் தானே பார்ப்பான் போல் தோன்றியது.

"சரி......... நானே பார்த்துவிட்டால் போச்சு......" என்று அவன் அவளை அண்மிக்க, "கறுப்பு" என்று அலறினுள். அவன் சிரித்தான். பின் தொடர்ந்தான்.

"படிக்கிறது மட்டும் முக்கியமில்லை வெறுமனே படித்துவிட்டுமட்டும் போனுல் வெறும் புத்தக பூச்சியாகவே இருக்க வேணும். மனப்பக்குவம் வேணும். அதையும் நாங்கள் வளர்க்கவேண்டும் இப்படி 'ருக்கிங்' செய்யிறதாலை மனம் பக்குவம் அடையுது. எதையும் எதிர்கொண்டு போகிற துணிவு பிறக்குது. அப்படிப்பட்ட எங்களாலை தான் எங்களின்ரை சமுதாயத்திற்கு நல்லது கிடைக்கும்......." என்று கொள்கை விளக்கம் கொடுத்தான்.

அன்றுமுதல் அவன் அவளுக்குள் புகுந்து கொண்டான். அவள் அடைந்த மனப்பக்குவப்படி, வேறு எவன் அவள் மனதுள் நுழைந்தாலும் அது பண்பற்றதாவே தோன்றியது. ஒருகணம் அவனை ஒரு குறுகிய புத்திக்காரன் என கணிப்பிட்ட அவள் அவனின் கொள்கை விளக்கத்தின்பின் தவறுணர்ந்து அவனை சமுதாயத்தின் முன்னேடியாக கருதினுள் கூடவே காதலித்தாள். அவனும் அவளை கைப்பற்றினுன்.

இருவரும் ஊர் அறிய காதலித்தனர். அவளுக்கு அவர்களின் காதலை ஊர்அறிய வைப்பதில் இஷ்டமில்லை. அவனுக்கு அது அவசியமானது வேறு எவனும் குறுக்கிடக்கூடாது என்பதே நோக்கு.

அவன் இரண்டு வருடங்கள் முன்பே முடித்துவிட்டு வெளிநாடு வந்துவிட்டான். தொடர்ந்தும் கடிதம் உறவை வளர்த்தது. இரண்டு வருடங்களுக்குள் அவளும் அவளின் படிப்பை முடித்துவிட்டாள். அவளும் வெளிநாடு புறப்பட முனைந்த போது அவனுக்கு 'கலியாணம்' செய்யவேண்டிய கடப்பாடு தோன்றியது அவளுக்கும் அதை தெரிவித்தான்.

"எங்களுக்குள்ளை ஏன் குழப்பம். இரண்டு வீட்டாரையும் எல்லாவற்றையும் செய்யும்படி சொல்வோம்" என்று அவளுக்கு எழுதினுன். அவளும் அதை ஆதரித்தாள்.

எல்லாம் "எண்பதற்கு ஓமோ இல்லையோ" என்பதுடன் முடிந்துவிட்டது. அவனின் வீட்டார்கேட்டது எண்பது ஆயிரம் என்பது ஆயிரம் ரூபாயல்ல, எண்பது ஆயிரம் கனடிய டொலர்.

தொகை மட்டும் அவளை நெருக்கவில்லை "இல்லையெண்டால் இங்கை இன்னொரு பகுதி கேட்குது" என்று காலமும் அவளை நெருங்கியது.

அவள் வீட்டார் அவளை நொந்தனர். அவள் கல்விமானை நொந்தாள். அவன் தொடர்பை தற்காலிகமாக "வீட்டாரின் வேண்டுகோளுக்கிணங்க" நிறுத்தினுன். மொத்தத்தில் தொடர்பு ஆறப்போட்டதாகவே கருதப்பட்டது. அவள் வீட்டார் எழுதிக்கூட பார்க்க முடியாத தொகை அது வெளிநாடு வந்த 'நக்கிற நாயள்' மட்டும் செலுத்தக்கூடிய தொகை அது.

அவளுக்கான காலக்கெடு எப்போ முடிந்தது என்று தெரியாது. இப்போ வருவது அவனின் ஊர்வலம். அவளின் காதுக்கு இது ஒரு பறைமேளங்களால் அழைத்துவரப்படும் ஊர்வலம் என்ருலும் அவளுக்கு மங்கள மேளம் இதமாக இருந்தது. அவனின் அந்த கல்யாண ஊர்வலம் அவளுக்கு அவனின் இறுதி ஊர்வலமானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# Bandit Queen?
# Banned it Queen?
# Band it Queen?

இந்தியாவின் சம்பல் பள்ளத்தாக்கின் கொள்ளைக்காரியான பூலான்தேவி தற்போது கதாநாயகியாக மட்டுமல்லாமல், ஜெயலலிதாவைப் போல் ஆதிபராசக்தியாகவும் உயர்ந்திருக்கிருர். பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு பற்றிய படம் ஏற்கனவே வெளிவந்து பதினைந்து திரைப்பட விழாக்களில் பெரும் வரவேற்பு பெற்ற போதிலும் இந்தியாவில் இதை திரையிடுவதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. கான்ஸ், ரொறன்ரோ, எடின்பரோ படவிழாக்களில் பெரும் வரவேற்பு பெற்றது இந்தப் படம்.

தற்போது இந்த தடையை எதிர்த்து படத்தின் இயக்குனர் நீதிமன்றம் போயிருக்கிருர்.

தன்னைப் பற்றி தவருன தகவல்கள் வந்திருப்பதாகவும் தனது தனிமையை இது பாதிப்பதாகவும் பூலான் வழக்குத் தொடர்ந்திருந்தார். ஆனுல் அந்தப் படம் அவரது தனிமையைப் பாதிக்கவில்லை என்றும் ஏற்கனவே அதிகளவு விற்பனையான புத்தகம் ஒன்றின் தழுவலே அது என்றும் இயக்குனர் வாதிட்டு வருகிருர். பூலானின் கதையை விபரிக்கும் புத்தகம் பிரெஞ்சு மொழியில் எட்டு மில்லியன் பிரதிகள் விற்பனையாகியிருக்கிறது. எனவே எப்படி தன் தனிமை பாதிக்கப்படுகிறது என்று பூலான் வாதிட முடியும் என்பது தான் தயாரிப்பாளரின் கேள்வி.

ஆனுல் இன்னமும் பூலான் அந்தப் படத்தைப் பார்க்கவேயில்லை.

தன் தனிமை பற்றி பூலான் அக்கறை கொள்வதற்கும் காரணம் இருக்கிறது. 83ல் சரணடைந்து, பதினெரு வருட சிறைக்குப் பின்னுல் சென்ற வருடம் விடுதலையான இவர் மீது கொலைக் குற்றச்சாட்டு உட்பட 48 குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இவர் இப்போது அரிஜனங்களுக்கான இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளார். கடந்த வாரம் அரிச்னங்களுக்கான தீவிரவாத அமைப்பு ஒன்றை இவர் ஆரம்பித்திருக்கிருர். இந்த அரிஜனர்கள் அம்பும் வில்லையும் குறியீடாக கொண்டு உயர்ஜாதி இந்துக்களின் அடக்குமுறைக்கு எதிராகப் போராடப்போகிருர்கள். இந்த அமைப்பு அரசாங்கத்திடம் அரிசனங்களுக்கும் பெண்களுக்கும் தொழில்களில் கோட்டா முறை தரப்பட வேண்டும் என்று வலியுறுத்த இருக்கிறது.

இந்த அமைப்புக்கு ஏகலைவன் சேனை என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அதற்கு காரணமும் உண்டு. மகாபாரதத்தில் குறைந்த ஜாதிக்காரனுன ஏகலைவன் வில்வித்தையில் சிறந்தவனுக இருப்பதைக் கண்டு துரோணர் அவனது பெருவிரலை காணிக்கையாகத் தரும்படி கேட்டுக் கொள்கிருர். குருபக்தியால் ஏகலைவன் அதை வெட்டி கொடுக்கிருன். குறைந்த ஜாதியினர் வில் வித்தையில் வல்லவராய் வரக் கூடாது என்று கருதியதாலேயே துரோணர் அவ்வாறு கேட்டார் என்பதே இந்த அமைப்பின் வாதமாக இருக்கிறது.

'அம்பும் வில்லும் ஏந்தி தங்களைக் காத்துக் கொள்ள அவர்களுக்குப் பயிற்றப் போகிருேம், அவர்கள் தங்களை இன்னமும் அடிமைப்படுத்த அனுமதிக்க மாட்டார்கள். ஏகலைவன் போல, இவர்கள் தங்கள் பெருவிரலை காணிக்கையாக்க மாட்டார்கள். ஆனுல் அவ்வாறு கோருபவர்களின் பெருவிரல்களைத் தான் அவர்கள் தேடுவார்கள்' என்று பத்திரிகையாளர் மாநாட்டில் பூலான் தெரிவித்திருக்கிருர்.

Bandit it Queen இப்போது Banned it Queen ஆகி இப்போது கூட்டம் சேர்த்து ராணியாகும் Band it Queen ஆகப் போகிருரோ என்னவோ?

★ ★ ★

அமெரிக்காவின் பிரபலங்களுக்கு நியூ யோர்க்கில் உள்ள ட்ரம்ப் டவர் எனப்படும் கட்டடத்தில் அப்பாட்மெண்ட் வைத்திருப்பது ஒரு கௌரவ சின்னம். 68 மாடிகள் கொண்ட இந்தக் கட்டடத்தில் 262 அப்பாட்மெண்ட்கள் இருக்கின்றன. சராசரி இவற்றின் விலை 6.6 மில்லியன் டொலர்கள். அதிகமான விலைக்கு 16 மில்லியன் வரை விற்றிருக்கிறது. பாதுகாப்பும் தனிமையும் பெருமையும் வேண்டும் ஹொலிவூட் மற்றும் உலகப் பிரபலங்களுக்கு இதில் வீடு வைத்திருப்பது கௌரவமான விடயம் தான்.

சவுதி மன்னர், புருணை மன்னர், பாஹ்ரெய்ன் சுல்தான், பிரிட்டிஷ் அரச குடும்பம், மைக்கேல் ஜாக்சன், சோபியா லோரன் என்று பெரிய அட்டவணையே இருக்கிறது.

★ ★ ★

## பட்டாபியின் சினி துணுக்கு Cine Tonic

நீண்ட காலத்திற்கு பின்னர் விஸ்வநாதனும் ராமமூர்த்தியும் இணைந்திருக்கிருர்கள். இரட்டையர்களாக இருந்து சக்கை போடு போட்டவர்கள் பின்பு பிரிந்ததும் ராமமூர்த்தி அஞ்ஞாத வாசம் போக, விஸ்வநாதன் கொடி கட்டிப் பறந்தார். ராஜாவின் வருகையுடன் விஸ்வநாதன் ஓரங்கப்பட்டப்பட தற்போது புதிய படம் ஒன்றில் இருவரும் இசையமைப்பதற்காக சேர்ந்திருக்கிருர்கள். நல்ல பாடல்களைத் தருவார்கள் என்று எதிர்பார்த்தாலும், ரகுமானின் வருகையால் ராஜாவே ஓரங்கட்டப்பட்ட நிலையில் இவர்கள் புதிய தலைமுறைக்கு என்ன தருவார்கள் என்பது கேள்விக் குறிதான்.

★ ★ ★

மாஸ்ட்ரோ இளையராஜா கொஞ்ச நாளாய் திரைப்பட விளம்பரங்களில் இயக்குனர்களுக்கும் மேலாக படம் போட்டு விளம்பரம் பெற்றவர். பாலச்சந்தர், பாரதிராஜா, மணிரத்தினம் போன்ற பெரும் இயக்குனர்களைக் பகைத்துக் கொண்டதால் தற்போது அவரை தங்கள் படத்தில் போடுபவர்கள் பாக்கியராஜ் போன்றவர்கள் தான்.

தற்போது புதிய ராகம் ஒன்றைக் கண்டுபிடித்து விட்டதாக செய்திகள் வந்திருக்கின்றன.

★ ★ ★

ராஜாவுக்கு பின்பாக ஹிந்தியில் கொடி கட்டிப் பறப்பவர் ரகுமான். தமிழில் ஹிட்டான பாடல்களை ஹிந்தியில் டப் பண்ணி சக்கை போடு போடுகிருர். சின்ன சின்ன ஆசை தொடக்கம் ஒட்டகத்தைக் கட்டிக்கோ வரையில் வடக்கில் சுப்பர் ஹிட்கள். ரோஜா பட கசட் விற்பனை 25 லட்சம்.

இப்போது பாடல்கள் விற்பனை படத் தயாரிப்பாளருக்கு பெரும் வருமானம் தரும் பகுதியாக

17ம் பக்கம் பார்க்க..


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தமிழா, உனக்கிது தருணம் வாய்த்தது

'தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு'
இல்லை, இல்லை
'தமிழன் என்றொரு ஏடுண்டு
தமிழர்க் கதனுல் கேடுண்டு' என்பது கூட பொருந்தும்.

28.12.94-03.1.95 தமிழன் வார ஏட்டின் கடைசிப் பக்கத்தில் வந்த செய்தி இது:

## இலங்கைத்தமிழர் என்ற போர்வையில் பிரிட்டனுக்கு இந்தியத் தமிழர் வருகிறுர்களாம்

பிரிட்டனில் தற்போது அரசியல் தஞ்சம் கோருபவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு வருகின்ற அதே வேளையில் இலங்கைத் தமிழரின் பெயரில் இந்தியத் தமிழர்கள் நூற்றுக்கணக்கானோர்கள் பிரிட்டனுக்குள் நுழைந்து கொண்டிருப்பதாக புகார் ஒன்று கிளம்பியுள்ளது. இதற்கு ஒத்தாசையாக இலங்கைத் தமிழரும் உதவி புரிந்து அவர்களுக்குத் தேவையான போலி அத்தாட்சிப் பத்திரங்களையும் பெற்றுக் கொடுப்பதில் ஈடுபட்டுள்ளனராம்.

பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் திருட்டுத்தனமாக பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மற்றும் அடையாள அட்டைகளை வினியோகித்து வரும் பேர்வழிகள் மீது தற்போது பொலிசாரின் கவனம் திரும்பியுள்ளது. இவ்வித போலிப் பத்திரங்களை பெற்றுக் கொடுக்க இரண்டாயிரம் முதல் நான்காயிரம் பவுண்டுகள் வரை சில இலங்கைத் தமிழர்கள் பெற்று வருவதாகக் கூறப்படுகிறது. இலங்கைத் தமிழர்களின் இன்னல்களை கவனத்திற் கொண்டு பிரிட்டன் அரசு தற்காலிக அனுமதி வழங்கும் நிலையில் இருக்கும் இதே வேளையில் இந்தியத் தமிழரும் இதனைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபடுவதை தமிழ் அகதிகளுக்கு உதவும் நிறுவனங்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழரை வெளியேற்றும் நடவடிக்கைகளில் பிரிட்டன் அரசு ஈடுபட்டிருக்கும் வேளையில் இந்தியத் தமிழரின் இவ்வித போக்கு இலங்கை அகதிகளுக்கு நெருக்கடியை மேலும் வளர்த்து வருகிறது. இவ்வித மோசடிக்கு உடந்தையாக இருப்போர் பற்றிய விபரங்களை home office க்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரனம் தமிழகத்தில் இருந்து களவாக வருகிற தமிழர்களை காட்டிக்கொடுப்பது ஈழத்தமிழர்களின் தலையாய கடமை. களவாக வருகிற ஈழத்தமிழர்களையும் இவ்வாறு காட்டிக் கொடுப்பது சரியா என்ற கேள்வி எழுகிறது. இவர்களை களவாக வரவழைக்க உதவுகிற வியாபாரிகள் யார் என்பதைப் பொறுத்துத் தான் நமது சட்டம் பேணும் மனுேபாவம் இருக்கிறதா? இந்தியத் தமிழராக பாசாங்கு செய்து இலங்கையர்த் தமிழர் லண்டன் வந்த போது அவர்களைக் காட்டிக் கொடுப்பது இந்தியத் தமிழரது கடமை என்று யாரும் கருதவில்லையா?

இந்த வேகத்தில் போனுல் மட்டக்களப்புத் தமிழரைக்காட்டிக் கொடுப்பது யாழ்ப்பாணத் தமிழரது கடமையாகவும் மலையகத் தமிழரைக் காட்டிக் கொடுப்பது கொழும்புத் தமிழரின் கடமையாகவும் முஸ்லிம்களைக் காட்டிக்கொடுப்பது (ஏற்கனவே அவ்வாறு இல்லாவிடின்) எல்லாத் தமிழர்களது கடமையாகவும் மாறும் காலம் எட்டத்தில் இல்லை.

**சி.சிவசேகரம்**
**லண்டன்**

## சினி துணுக்கு..

இருப்பதால் தயாரிப்பாளர்களே கசட் விற்பனையில் இறங்கியிருக்கிறுர்கள். காதலன் படத் தயாரிப்பாளர் குஞ்சுமோன் தன் படத்திற்கான பாடல்களை தானே வெளியிட்டிருக்கிறுர். காதலன் வெளியிட்ட போது ஒரு லட்சம் கசட்டுக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. பம்பாய் படத்திற்காக இரண்டரை லட்சம் கசட்டுக்கள் வெளியிடப்படுகின்றன.

★ ★ ★

புதிய தலைமுறைக்கு ராப் பாடல்கள் கொடுத்த கிக்கோ என்னவோ, ரகுமானின் பாடல்களுக்கு இளைய தலைமுறையின் வரவேற்பு அந்த மாதிரி. இதனுல் ரகுமானின் இசையமைப்பில் சிக்குப் புக்கு ரயிலே, டேக் இட் ஊர்வசி பாடல்களைப் பாடிய சுரேஷ் பீட்டர்ஸ் தற்போது மின்னல் என்ற கசட் வெளியிட்டிருக்கிறுர்.

★ ★ ★

இம்முறை உலக அழகிகள் பட்டத்திற்கான இரண்டு போட்டிகளிலும் இந்திய அழகிகளே தெரிவாகியிருக்கிறுர்கள். மிஸ்யூனிவேர்ஸ், மிஸ்வேர்ல்ட் ஆகிய போட்டிகளில் முறையே சுஸ்மிதா சென், ஐஸ்வர்யா ராய் இருவரும் தெரிவாகியிருக்கிறுர்கள்.

இவர்கள் இருவரும் தற்போது இந்திய கோலா யுத்தத்தில் ஆயுதங்களாகியுள்ளனர். பெப்சிக் கோலா, கொக்கா கோலா இரண்டும் இந்திய சந்தையில் நுழைந்து சந்தையைப் பிடிக்க கடும் பிரயத்தம்செய்கின்றன. இதனுல் தங்கள் விளம்பரங்களில் பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து இரண்டும் இருவரையும் வளைத்துப் போட்டிருக்கின்றன. தற்போது இந்திய தொலைக்காட்சி விளம்பரங்களில் கோலா விளம்பரங்களில் இவர்கள் தான் பயன்படுகிறுர்கள்.

என் மேனி எழிலுக்கு காரணம் லக்ஸ் என்பது போய், என் மேனி எழிலுக்கு காரணம் கோலா என்று மாறுமோ என்னவோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழில்: நேசன்

# கறை படிந்த கைகள்

## ஜீன் போல் சாத்ரே

ஒல்கா: நீ மீண்டும் கட்சிக்குள் வருகின்றாய்
ஹிகோ: நல்லது
ஒல்கா: இன்று நடு நிசியில் உன்னைக் கொல்ல சார்ல்ஸ்சும் லூயீசும் வருவார்கள் அவர்களை உள்ளே வர நான் விடமாட்டேன். உன்னை மாற்றலாம் என நான் அவர்களிடம் சொல்வேன்.
ஹிகோ: (சிரித்தபடி) மாற்றலாம். அது ஓர் அர்த்தமற்ற சொல். அந்தச் சொல் உதவாத ஒன்றுக்கு குறிப்பிடப்பட்டது என்ன?
ஒல்கா: நீ ஏற்றுக் கொள்கின்றாயா?
ஹிகோ: ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது?
ஒல்கா: நாளை உனக்கு புதிய கட்டளைகள் கிடைக்கும்.
ஹிகோ: நல்லது
ஒல்கா: கடவுளுக்கு நன்றி. (அவள் கதிரையில் அமர்கின்றாள்)
ஹிகோ: உனக்கு என்ன பிரச்சனை?
ஒல்கா: நான் சந்தோஷப்படுகின்றேன் (மௌனம்) நீ 3 மணித்தியாலங்களாகக் கதைத்தாய். நான் பயந்துபோனேன்.
ஹிகோ: எதற்காகப் பயப்பட்டாய்
ஒல்கா: நான் அவர்களுக்கு என்ன பதில் சொல்லுவது என்று தான் பயப்பட்டேன். ஆனால் இப்ப எல்லாம் சரி நீ எங்களுடன் வந்து. மீண்டும் ஓர் ஆண் செய்யும் வேலையைச் செய்யலாம்.
ஹிகோ: முன்பு போல் எனக்கு உதவி செய்வாயா?
ஒல்கா: ஆம் ஹிகோ உதவி செய்வேன்
ஹிகோ: உன்னை எனக்குப் பிடிக்கிறது. ஒல்கா நீ எப்போதும் அதே ஒல்கா தான். நீ தான் எனக்கு தூய்மைவாதத்தைப் பற்றிப் போதித்தாய்?
ஒல்கா: இப்ப எனக்கு வயது போகிறது.
ஹிகோ: இல்லை (அவளது கையை எடுக்கிறான்)
ஒல்கா: ஒவ்வொரு நாளும் உன்னை நான் நினைப்பேன்
ஹிகோ: மேலும் சொல் ஒல்கா
ஒல்கா: ஆமாம்.
ஹிகோ: அந்த பார்சல்களைப் பற்றிச் சொல்லு. அதை நீதான் அனுப்பினாயா?
ஒல்கா: எந்தப் பார்சல்கள்
ஹிகோ: என்னைக் கொலை செய்ய அனுப்பிய சொக்கலேட் பார்சல்கள்?
ஒல்கா: இல்லை. அதை நான் அனுப்பவில்லை. ஆனால் அதை உனக்கு அனுப்பப்படப் போகின்றன என எனக்குத் தெரியும்.
ஹிகோ: அப்ப நீ அவர்களை அதைச் செய்யவிட்டாய்?
ஒல்கா: ஆமாம்
ஹிகோ: ஆனால் அதைப்பற்றி என்ன நினைத்தாய்?
ஒல்கா: (தனது தலைமயிரைக் காட்டியபடி) இதைப்பார்
ஹிகோ: இது என்ன, நரைத்திருக்கின்றன.
ஒல்கா: இந்த நரைகள் ஒரே இரவில் வந்தன. ஒரு போதும் நீ என்னை விட்டுப் பிரியாதே. எங்களுக்கு என்ன கஷ்டம் வந்தாலும் நாங்கள் இருவருமாக அவற்றை எதிர்கொள்வோம்.
ஹிகோ: ( சிரித்தபடி) ராஸ்கோல்னிக்கோவை ஞாபகமிருக்கின்றதா?
ஒல்கா: (துள்ளி எழுந்தபடி) ராஸ்கோலினிக்கோவ்
ஹிகோ: அது தான் நீ எனக்குத் தந்த இயக்கப் பெயர்.
ஒல்கா: அதை மறந்துவிட்டாயா?
ஒல்கா: ஆம் ஞாபகம் வருகின்றது
ஹிகோ: நான் அதை மீண்டும் பாவிக்கிறேன்
ஒல்கா: வேண்டாம்
ஹிகோ: ஏன்? அது எனக்குப் பிடித்திருக்கின்து. நீ சொன்ன மாதிரி கையுறை கைக்குப் பொருந்துவது மாதிரி அது எனக்குப் பொருந்தியது.
ஒல்கா: அது உன்னைப் பிரபலப்படுத்திய ஓர் பெயரும் கூட அந்தப் பெயரில் உன்னை எல்லோருக்கும் தெரியும்.
ஹிகோ: தெரியுமா? யாரால்?
ஒல்கா: இப்ப நேரம் என்ன?
ஹிகோ: 5 நிமிடம்....
ஒல்க: நான் சொல்வதைக் கவனமாகக் கேள் ஹிகோ நான் கதைக்கும் போது இடைமறிக்க வேண்டாம் நான் உனக்கு ஒரு விஷயம் சொல்லவேண்டும். அந்தவிடயம் குறித்து உனது மனதை அலட்டிக்கொள்ளக்கூடாது அது உன்னை வியப்படையச் செய்தாலும் பின்பு நீ விஷயங்களை அறிந்து கொள்வாய்.
ஹிகோ: நல்லது
ஒல்க: செய்த வேலையைப்பற்றி நீ சொன்னதையிட்டு நான் மிகவும் சந்தோஷப்படுகின்றேன். அதில் பெருமையும் திருப்தியும் அடையாவிட்டால் உனக்கு மேலும் கஷ்டத்தைத் தரும்.
ஹிகோ: கஷ்டமா? என்ன கஷ்டம்
ஒல்கா: அதை மறைப்பது கஷ்டமானது
ஹிகோ: மறப்பதா ஒல்கா ஆனால்
ஒல்கா: ஹிகோ அதை நீ மறக்க வேண்டும் நான்

## தொடர் நாடகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உன்னிடம் ஒன்றும் அதிகமாகக் கேட்கவில்லே. அதை ஏன் செய்தாய் அல்லது நீ தான் அதைச் செய்தாயா? என்ற கேள்வி உனக்கு என்றும் உள்ளது என்று கூறினுய், நீ ஹொரடேடரைக் கொல்லவில்லே என்றும் கூறினுய். அது மிகவும் நல்லது. நீ சரியான பாதையில் இருக்கின்ருய் நீ மேலும் முன்னேற வேண்டும் அவ்வளவுதான். அதை ஓர் பயங்கர கனவாக எண்ணி மறந்து விடு. அதைப்பற்றி இனிக் கதைக்க வேண்டாம் என்னிடமும் கதைக்க வேண்டாம். ஹெடேடரைக் கொன்றவன் இறந்துவிட்டான். கொலேயாளியான ராஸ்கோலினிக்கோவ் சிறையில் சொக்கலேட் உண்ணும் போது இறந்து போனுன். (தனது தலேமயிரை அவள் உலுப்பிக் கொள்கின்ருள்) இப்போது உனக்கு நான் வேறு ஓர் பெயரைத் தெரிவு செய்து உள்ளேன்.

ஹிகோ: என்ன இங்கு இப்ப நடக்கின்றது ஒல்கா..... நீ என்ன செய்தாய்?

ஒல்கா: எமது கட்சி இப்போது கொள்கையை மாற்றி விட்டது (ஹிகோ அவளேக் கூர்ந்து பார்க்கின்ருன்) என்னே நீ அப்படிப் பார்க்காதே. நான் சொல்வதைப் புரிந்துகொள். நாங்கள் உன்னே ஹொரடேடரைக் கொல்ல அனுப்பியபோது எங்களுக்கு ருஷ்யாவில் உள்ள தொடர்பு மிகக் கஷ்டமாக இருந்தது. நாங்கள் அவர்களது தொடர்பின்றி எமது முடிவிலேயே அந்தத் தீர்மானத்தை எடுத்தோம். நீ அப்படி என்னேப் பார்க்காதே ஹிகோ! அப்படி என்னேப் பார்க்க வேண்டாம்.

ஹிகோ: பின்பு

ஒல்கா: பின்பு எமக்கும் ரஷ்யர்களுக்குமான தொடர்பு மீண்டும் ஏற்படுத்தப்பட்டது போன குளிர் காலத்தில். சோவியத் இராணுவக் காரணங்களேக் கருத்தில் கொண்டு எம்மை றிஜென்ட் அரசுடன் கூட்டுசேருமாறு ஓர் கொள்கையை முன்வைத்தது.

ஹிகோ: அப்ப நீங்கள்– அதற்கு அடிபணிந்தீர்களா?

ஒல்கா: ஆம் நாங்கள் ஆறுபேர் கொண்ட ஓர் இரகசியக் கொமிட்டியை அரசாங்கத்துடனும் பென்டகன் உடனும் செய்து கொண்டோம்

ஹிகோ: ஆறு அங்கத்தவர்கள். அதில் உங்களுக்கு 3 வோட்டுக்கள் உள்ளன.

ஒல்கா: ஆம் அது உனக்கு எப்படித் தெரியும்

ஹிகோ: அது எப்படியோ எனது தலேக்குள் இருந்து வந்தது. மேலும் சொல்

ஒல்கா: அதன்பின் எமது படை போரில் ஈடுபடவில்லே அதன்மூலம் பல்லாயிரக்கணக்கான உயிர்களே நாம் பாதுகாத்தோம் ஆனுல் ஜேர்மனியர்கள் உடன் எமது நாட்டினுள் படையெடுத்தார்கள்.

ஹிகோ: சரியானது. நான் நினேக்கின்றேன் ரஷ்யர்கள் கூட தொழிலாளர் கட்சிக்கு முழு அதிகாரமும் போவதை விரும்பவில்லே என்று உங்களுக்கு புரிய வைத்திருப்பார்கள். அவர்களுக்கு நேச அணிகளுடன் பிரச்சனேகள் கூட இருக்கும், வேறு என்ன, கிளர்ச்சியால் நீங்கள் விரைவில் அழிக்கப்படுவீர்கள்

ஒல்கா: ஆனுல?

ஹிகோ: இவை எல்லாம் தான் முதலில் கேட்ட விஷயம்தான். ஹோடடர் பற்றி என்ன?

ஒல்கா: அவனது முயற்சிகள் மிகவும் வளர்ச்சி குன்றியவையாக இருந்தன. மேலும் அவன் இவ்வாருன ஓர் கொள்கையை அமுல்படுத்தத் தகுதியானவனும் அல்ல.

ஹிகோ: அதனுல் அவன் கொல்லப்படவேண்டும், அது விளங்குகின்றது. அப்ப நீங்கள் அவனது மரியாதையைப் புனரமைக்க முன்வந்தீர்கள்.

ஒல்கா: எங்களுக்கு வேறு வழி இருக்கவில்லே

ஹிகோ: போரின் முடிவில் அவனுக்கு சிலே எழுப்பப்படும், சில வீதிகளுக்கு அவன் பெயரும் தரப்படும், அவன் பெயர் சரித்திரப் புத்தகத்திலும் இடம் பெறும். அது அவன்பால் எனக்கு சந்தோஷத்தைத் தரும் அவனேக் கொன்றவன் யார்? அவன் கடந்த காலம் என்ன? அவன் ஜெர்மனியின் கை ஆள், பணத்திற்காக ஹெடேரைக் கொலே செய்தான்.

ஒல்கா: ஹிகோ

ஹிகோ: எனக்குப் பதில் சொல்

ஒல்கா: நீ எங்களில் ஒருவன் என்பது எமது தோழர்களுக்குத் தெரியும். அவர்கள் காதலுக்காகச் செய்யப்பட்ட கொலே என அதை நம்பமாட்டார்கள் பின்பு கதையை அதற்கேற்பவாறு மாற்றத்தானே வேண்டும்.

ஹிகோ: நீ உனது தோழர்களுக்குப் பொய் சொன்னுய்

ஒல்கா: பொய்யா இல்லே. ஆனுல் நாங்கள் யுத்தத்தில் இருக்கின்ரேம். ஹிகோ படைகளுக்கு எல்லா உண்மைகளேயும் சொல்ல முடியாது (ஹிகோ வெடித்துச் சிரிக்கத் தொடங்குகின்ருன்) இப்ப என்ன நடந்தது ஹிகோ ஹிகோ!

(கதிரையில் அமர்ந்த ஹிகோ கண்ணீர் வரும் வரை சிரிக்கின்ருன்)

ஹிகோ: இதைத்தான் ஹொரடேடரும் எனக்குச் சொன்னுன். இதையே அவனும் சொன்னுன் .....பெரும் பகிடி முட்டாள்தனமான பகிடி

ஒல்கா: ஹிகோ

ஹிகோ: கொஞ்சம் பொறு ஒல்கா. நான் கொஞ்சம் சிரிக்க வேண்டும் இப்படிச் சிரித்து எனக்கு 10 வருடங்கள் ஆகிவிட்டன. இது வெட்கப்படத்தக்க ஓர் கொலே. இதனே ஒருவரும் உரிமை கோர முடியாது. இதை நான் ஏன் செய்தேனே எனக்குத் தெரியாது. அதே வேளே இப்பிரச்சனேயை என்ன செய்வதென்று உனக்குத் தெரியாது (அவன் அவளேக் கூர்ந்து பார்க்கின்ருன்) நீங்கள் எல்லோரும் ஒரேமாதிரியான ஆட்கள்.

ஒல்கா: ஹிகோ நான் உன்னே கெஞ்சிக் கேட்கின்றேன்.. .......

ஹிகோ: எல்லோரும் ஒரேமாதிரித்தான் ஹொரடேடர், லூயிஸ், நீ எல்லோரும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள் நீங்கள் தான் வெற்றி கொள்பவர்கள், தலேவர்கள், துணிச்சலானவர்கள். நான்தான் இங்கு பிழையானவன்.

ஒல்கா: ஹிகோ நீ ஹொரடேடரை நேசித்தாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

இடதுசாரி கட்சிகள் மீதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீதும் தாக்குதல்களைத் தொடுத்து அவற்றை அரசியல் பூமியிலிருந்து அப்புறப்படுத்தலே தாக்குதல்களின் பிரதான திசையாக விருந்தது. இக் கட்சிகள் பரம வைரியாகவே கணிக்கப்பட்டன. இது எவ்வளவு தூரத்துக்குச் சென்றது எனக் கூறுவதாயின் இடது சாரிக் கட்சிகளுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் எதிராக யூ என்பி யுடன் கள்ளத்தனமான உறவுகளைக் கொள்ளும் அளவுக்கு ஜேவிபியினர் தள்ளுப்பட்டனர். இக் காலத்தில் ஜேவிபி தலைமை தமது மூல உபாயக் "குத்துச் சண்டை தத்துவம்" என அறிமுகப்படுத்தினர். குத்துச் சண்டை விளையாட்டின் போது போது முடி சூடப்பட்டுள்ளவனுக்கு எதிராக போட்டியிட முன்னர் மூன்றுவதும் இரண்டாவதும் இட மட்ட விளையாட்டுவீரர்களை தோற்கடித்து தகமை பெறவேண்டியது போன்று அரசியலில் முடி சூடப்பட்டுள்ள யூ என் பியை தோற்கடிக்க முன்னர் ஏனைய போட்டியாளர்களை தோற்கடிக்க வேண்டும் என விஜேவீர கூறினார்

## ஜேவிபி யின் மூல தந்திர உபாயங்கள்

மூல உபாயம் தந்திரோபாயம் என்பது தலைமையிடம் அத்தியாவசியமாக இருக்கவேண்டிய அடிப்படை அம்சம் எனக் கூறமுடியும். தவறற்ற மூல தந்திர தயாரிப்பதில் சமார்த்தியமாக இருந்தால் மட்டுமே வெற்றிகரமான தலைமை வழங்கப்படுகிறது எனக் கொள்ளலாம். மூல உபாயம் பெரும்பாலும் அரசியல் செயல் முறைகளுக்குச் சமமானதாகும். ஆயினும் மூல உபாயம் என்பதும் அரசியல் செயல் முறைகள் என்பதும் ஒன்றல்ல. மூல உபாயம் புரட்சியின் பிரதான நோக்கம், பிரதான பணியை குறிப்பிடுகிறது. புரட்சியின் குறித்த கட்டங்களில் தாக்குதலின் பிரதான திசையை நிச்சயிக்கிறது. புரட்சிகரச் சக்திகளை நெறிப்படுத்தலுக்கான திட்டத்தின் வெளியீடாகவும் இருக்கிறது. புரட்சியின் குறித்த கட்டத்தில் இத் திட்டத்தை ஈடேற்றிக் கொள்வதற்காக செய்யும் போராட்டம் பயணம் செய்யும் விதத்தையும் படி முறையில் குறிக்கிறது. மூல உபாயம் என்பது திட்டவட்டமான ஒரு காலகட்டம் பூராவும் செயல்படுகின்ற போராட்டத்திற்கான அடிப்படை அவதானம் எனவும் கூறலாம்.

ஜே.வி.பி யின் வரலாற்றில் பிரதான காலகட்டம் மூன்றிலும் மூல உபாயத்திலும் வேறுபாட்டைக் காண முடியும். முதலாவது காலகட்டத்தில் புரட்சியின் பிரதான நோக்கமாகவிருந்தது முதலாளித்துவ ஆட்சியாளர்களை துரத்தியடித்து சோஷலிசத்தை ஏற்படுத்தலாகும். பாட்டாளி வர்க்கமே புரட்சியின் தலைமைச் சக்தி எனக் கூறப்பட்டது. பாட்டாளி வர்க்கத்தின் பிரதான நண்பன் விவசாயி எனவும் கூறப்பட்டது. ஆனால் நடைமுறையில் இளைஞர்களும் மாணவர்களுமே புரட்சியின் பிரதான சக்தியாகவும் ஒரே சக்தியாகவும் கருதப்பட்டனர். புரட்சிகர சக்திகளை நெறிப்படுத்தும் முறையாக தொழிலாளர் விவசாயி இணைப்பைப் ஏற்படுத்தலைப் பற்றி கூறப்பட்ட போதிலும் நடைமுறையில் அவ்வாறான ஒன்றைக் காணமுடியவில்லை. பிரதான தாக்குதலின் திசையைப் பற்றி கூறுதபோதிலும் இக்காலகட்டத்தில் நடைமுறையில் தாக்குதல்களை தொடுத்தது பிரதானமாக இடதுசாரி கட்சிகளின் சக்திகளை தமது பக்கம் வென்றெடுக்கவேயாகும்.

இரண்டாவது கட்டத்தின்போது (1971 கிளர்ச்சியின் பின்னரான காலம்) ஜேவிபியின் மூல உபாயத்தின்படி பாட்டாளி வர்க்கம் புரட்சியின் தலைமைச் சக்தியாகவும் விவசாயிகள் பிரதான பின்பயணிச் சக்தியாகவும் புரட்சிகர சக்திகளை நெறிப்படுத்தும் முறையாக தொழிலாளர் விவசாயி ஐக்கியத்தைப்பற்றி விபரிக்கப்பட்ட போதிலும் நடைமுறைச் செயல்களின் போது அவ்வாறான ஒன்றைக் காணமுடியவில்லை. இக்காலத்தில் புரட்சியின் நோக்கமாக இருந்ததும் முதலாளித்துவ ஆட்சியாளரை வீழ்த்தி சோஷலிசத்தை கட்டி எழுப்புதலாகும். முதலாளித்துவ ஆட்சியாளரை வீழ்த்தும் பிரதான போராட்ட முறையாக தேர்தல் நடவடிக்கைகள் மாறியிருந்தன. இடதுசாரி கட்சிகள் மீதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீதும் தாக்குதல்களைத் தொடுத்து அவற்றை அரசியல் பூமியிலிருந்து அப்புறப்படுத்தலே தாக்குதல்களின் பிரதான திசையாக விருந்தது. இக் கட்சிகள் பரம வைரியாகவே கணிக்கப்பட்டன. இது எவ்வளவு தூரத்துக்குச் சென்றது எனக் கூறுவதாயின் இடது சாரிக் கட்சிகளுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் எதிராக யூ என்பி யுடன் கள்ளத்தனமான உறவுகளைக் கொள்ளும் அளவுக்கு ஜேவிபியினர் தள்ளுப்பட்டனர். இக் காலத்தில் ஜேவிபி தலைமை தமது மூல உபாயக் "குத்துச் சண்டை தத்துவம்" என அறிமுகப்படுத்தினர். குத்துச் சண்டை விளையாட்டின் போது போது முடி சூடப்பட்டுள்ளவனுக்கு எதிராக போட்டியிட முன்னர் மூன்றுவதும் இரண்டாவதும் இட மட்ட விளையாட்டுவீரர்களை தோற்கடித்து தகமை பெறவேண்டியது போன்று அரசியலில் முடி சூடப்பட்டுள்ள யூ என் பியை தோற்கடிக்க முன்னர்

**வசந்த திசாநாயக,**
**பற்றிக் பெர்னாண்டோ**
**சரத் த சில்வா, ரஞ்சித் குமார**

**தமிழாக்கம்: செ.லோகநாதன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net 

ஏனைய போட்டியாளர்களை தோற்கடிக்க வேண்டும் என விஜேவீர கூறினார் இதற்கமையவே விஜேவீர தனது இவ் உபாயத்தை "குத்துச் சண்டை தத்துவம்" எனப் பெயரிட்டார்.

மூன்றாவது கட்டத்தில் அதாவது 1983ன் பின்னரான கால கட்டத்தின் மூல உபாயம் அதற்கு முந்திய இரு கட்டங்களையும் விட வேறுபட்ட சுபாவத்தைக் கொண்டிருந்தது. இக் காலத்தில் விசேடமாக 1987ன் பின்னர் ஜேவிபியின் நோக்கமாக விருந்தது "விசேட ஆக்கிரமிப்பாளனிடமிருந்து" தாய் நாட்டை விடுவிப்பதாகும். புரட்சி தேசபக்த புரட்சியாகியது, புரட்சியின் தலைமை பாட்டாளி வர்க்கம் எனக் கூறப்பட்ட போதிலும் நடை முறை ரீதியாக அதன் தலைமை பல்வேறு வர்க்கங்களிலிருந்தும் உருவான இளைஞர் சக்தியை அடிப்படையாகக் கொண்டிருந்தது. தொழிலாளர் விவசாயிகள் ஐக்கியம் பற்றி தத்துவார்த்த கல்வி முகாம்களில் பேசப்பட்ட போதிலும் "புரட்சிகரச் சக்திகளை" நெறிப்படுத்தும் பிரதான முறையாகவிருந்தது குறுந்தேசிய வாத அடிப்படையில் முதலாளித்துவ வாதிகள் தொடக்கம் பாட்டாளிகள் வரையிலான சகல வர்க்கச் சக்திகளையும் இந்தியாவுக்கும் தமிழ் தேசியப் போராட்டத்துக்கும் எதிராக நெறிப்படுத்தியதேயாகும்.

குறுந்தேசியவாதத்திற்கு எதிராகவும் இனங்களுக்கிடையே ஐக்கியத்திற்காகவும் செயல்பட்ட சக்திகளை ஈழம் வாதிகள் இந்திய அடிவருடிகள் எனக் குறி சூட்டி தனிமைப்படுத்தி தாக்கி அழித்ததே தாக்குதல்களில் பிரதான திசையாகவிருந்தது.

ஒவ்வொரு கட்டத்தினதும் ஜேவிபியின் உபாயங்களைப் பார்க்கும் போது அதன் வேலைத் திட்டம் அரசியல் செயல் முறைகளைப் போன்றே உபாயங்களும் விரைவில் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்திற்கு பொருத்தமான முறையில் சக்திகளை நெறிப்படுத்தியதையும் தாக்குதலின் பிரதான திசையை தீர்மானிக்க முயற்சித்ததையும் காணக் கூடியதாகவிருந்தது, ஜேவிபியின் ஒரே நோக்கம் எந்த முறையிலாவது எவ் உபாயத்தைப் பாவித்தாவது அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதேயாகும். இதற்கமையவே அதன் மூல தந்திர உபாயங்கள் உருவாக்கப்பட்டன.

ஜேவிபியின் தந்திரோபாயம் என்ன? தந்திரோபாயம் என்பது மூல உபாயத்தை அடைவதற்காக ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் மாறுபடும் நிலைமைகளுக்கு ஏற்ப போராட்டத்தில் நடைமுறைப்படுத்தும் விதிமுறையாகும். தந்திரோபாயம் வருடத்திற்கு வருடம் மாதத்திற்கு மாதம், வாரத்திற்கு வாரம், நாளுக்கு நாள் மட்டுமன்றி கணத்திற்கு கணம் கூட மாறுபடலாம் மூல உபாயம் ஒரு குறித்த கட்டம் பூராவும் நிலையாக நிலவுவதோடு தந்திரோபாயம் அம்மூல உபாயத்திற்கு கீழ் தொடர்ச்சியாக மாறுபட்டு செயல்படும். தொடர்ந்தும் மாறுபடும் நிலமைகளுக்கு ஏற்ப தவறற்றதும் பொருத்தமானதுமான தந்திரோபாயங்களைச் செயற்படுத்த ஒரு இயக்கம் தவறினால் அது தவிர்க்க முடியாதவாறு தோல்வியையே தழுவிக் கொள்ளும். மூல உபாயம் முழு நோக்கத்தையும் வெல்வதை இலக்காகக் கொள்வதோடு தந்திரோபாயம் ஒப்பு நோக்கில் முழு நோக்கத்தையும் வெற்றி அடைவதற்குத் தேவையான ஒவ்வொன்றையும் வெல்வதை இலக்காகக் கொள்ளும்.

ஜேவிபியின் தந்திரோபாயங்களைப் பற்றிப் பேசும்போது 71க்கு முந்திய கட்டத்தில் நடைமுறை ரீதியான அரசியல் தந்திரோபாயத்தைப் பற்றிப் பேசுவது ஓரளவு கஷ்டமானதாகும், இரகசியமாக நடாத்தப்படும் அரசியல் வகுப்புகள் மூலமாக தனிநபர்களை வென்றெடுத்து ஸ்தாபனமயப்படுத்தி குறித்த ஒரு தினத்தில் இரகசியமாக தாக்குதல்களைத் தொடுத்து அதிகாரத்தை கைப்பற்றுதலுக்காகவே செயல்பட்டது. இதன்படி அதிகாரத்தைக் கைப்பற்றுவதைத் தவிர அதற்கு முன் அரசியல் பூமியில் செய்வதற்கு எவ்வித நடைமுறைப் போராட்டமும் இருக்கவில்லை. ஆதலால் இக் காலகட்டத்தின் ஜேவிபியின் தந்திர உபாயம் பற்றி பேசுவது வரையறைக்குள்ளேயாகும்,

அவ்வாறாயினும் கூட இக்காலகட்டத்தில் ஜேவிபியிடம் எவ்வித தந்திரோபாயமும் இருக்கவில்லை என்றும் கூறமுடியாது, அரசியல் வேலைகள் செய்யும் போது வெளிப்படையாக அன்றி இரகசியமாக வேலை செய்தது முதற் கட்டத்தின் ஆரம்ப கால தந்திரோபயமாகவிருந்தது, விஜேவீர உட்பட தலைவர்கள் சிலர் 70ல் கைது செய்யப்பட்டு விடுதலையாகிய பின்னர் வெளிப்படையாக வேலை செய்யும் தந்திரோபாயமும் நடைமுறைப்படுத்தப்பட்டது, இக்காலத்தில் இரகசியம் வெளிப்படை ஆகிய இருவகையும் பாவிக்கப்பட்டன. இவ் இருவகை வேலையும் நடைமுறை அரசியல் போராட்டங்களுக்கு அல்ல பிரச்சார வேலைகளுக்கே பாவிக்கப்பட்டன வெளிப்படையான வேலை பொதுக் கூட்டங்கள், பத்திரிகை அறிக்கைகளுடன் மட்டுப்படுத்தப்பட்டதோடு இரகசிய வேலை இரகசிய வகுப்புகள் நடத்துவது, ஆயுத பாணியாவது ஆகிய வற்றுக்காக மட்டுப்படுத்தப்பட்டன, இக்காலத்தில் வேலை செய்யும் பிரதான தந்திரோபாயமாகவிருந்தது இரகசியமாக செயல்படுதலேயாகும்,

இரண்டாவது கட்டத்தின்போது இரகசிய வேலையும் வெளிப்படையான வேலையும் பக்கங்களை மாற்றிக் கொண்டன, வெளிப்படையான வேலை பிரதான இடத்தை வகித்ததோடு இரகசியமாக செய்த வேலைகள் படிப்படியாக குறைந்தன, இக்காலகட்டத்தில் அனேகமாக பாராளுமன்றவாத அரசியல் தந்திரோபயமே ஈடுபடுத்தப்பட்டது, யூ என்பி ஆட்சிக்கு எதிரான பிரதான மாற்றுச் சக்தியாக மாறவேண்டும் என்பதற்காக அரசாங்கத்துடன் நேரடியாக மோதும் தந்திரோபாயத்தைக் கைவிட்டு அரசாங்கத்திற்கு எதிரான கட்சிகளுடனேயே நேரடியாக மோதியது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடனும் இடது சாரிக் கட்சிகளுடனுமே மோதியது, இக்கட்சிகளை முடிந்த வரை பெலவீனப்படுத்தவும் அக்கட்சிகளின் பின்னால் உள்ள சக்திகளைப் பெலவீனப்படுத்தி தமது பக்கம் இழுத்தெடுப்பதுமே ஜேவிபியால் பாவிக்கப்பட்ட தந்திரோபாயம் ஆகும். அதுமட்டுமன்றி தம்மால் அத்திவாரத்தை இடமுடியாத சகல இடங்களிலும் இடம் பெறும் போராட்டங்களை பெலவீனப்படுத்தச் செயல்படுவதும் ஜேவிபியின் தந்திரோபாயமாகவிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ரகுமான் இளையராஜாவை நெ(ா)ருக்குகின்றாரா?

தமிழ்த் திரை இசை என்கையில் திரைப்படப் பாடல்களே நினைவில் வரும். உண்மையில் பாடல்கள் மட்டுமல்ல திரையிசை, திரைப்படம் முழுதுக்குமான பின்னணி இசையையே குறிக்க வேண்டும். சில காட்சிகளிற்கு இசை இன்றிக் கூட இருப்பதுண்டு இதனைத் தீர்மானிப்பது கூட இசையமைப்பிற்குள்ளேயே அடங்கும்.

இன்றைய நிலவரத்தில் எம்.எஸ்.வி, கே.வி.எம் ஆகியோர் திரைக் களத்திலிருந்தும் ஒதுக்கப்பட்டு விட்டார்கள் என்றே கொள்ள வேண்டும். ஆனால் இவர்கள் இராஜாங்கம் செய்து கொண்டிருந்த காலமும் இருந்தது. எந்தப் படம் என்றாலும் இருவரில் ஒருவர்தான், கூடுதலாக எம்.எஸ்.வி தான் தமிழ்த் திரையுலகை தன் கைகளுக்குள் கட்டி வைத்துக் கொண்டிருந்தார்.

இந்தக்கால கட்டத்தில் பெல் பொட்டம் போட்டு ஹிப்பிச் சடையுடன் "கிற்றார்" வாசித்தபடி ஒரு இளைஞன் "அன்னக்கிளியே உன்னைத் தேடுதே" என்று எங்களைத் தேடி வந்திருந்தார்.

தேடிக்கொண்டு அவர் வந்திருந்த பாதை கரடு முரடானது. எத்தனையோ உதாசீனங்களின் பின்பும் விடாத முயற்சி. இவரது தமயனுக்கு சினிமா உலகுடன் இருந்த நட்பும், பக்க வாத்தியக்காரராக சிறு குழுவுடன் இணைந்திருந்ததும், கூடவே அதிஷ்டமும் இளையராஜாவுக்கான பக்கபலம் என்பதும் கூட பொருத்தமானதே. ஆனாலும் இப்பக்கபலம் இவரைத் தமிழ்த் திரையுலகில் சின்னதொரு சுடராகத் தான் நுழைத்து விட்டது. மிகுதி வியாபகம் எல்லாம் அவரது உழைப்பு: உழைப்பு: உழைப்பு; ஏனெனில் இவருக்குக் கொஞ்சம் முந்தி வந்திருந்த சங்கர் கணேஷ் இரட்டையர்களிடம் இருக்காத இசைத் தாகம் இவரிடம் இருந்தது இவரது பாடல்களின் பிரபல்யமே சாட்சி.

இங்கு பாடல்களை பற்றியே அதிகம் கூற வேண்டியுள்ளது.. ஏனெனில் எல்லோருக்கும் நினைவில் இருக்கக் கூடியது என்பதால்

திரைப்படப் பின்னணி இசையைக் கூறும்போது என் போன்றோர் "விஸ்வநாதனில்" மூழ்கியிருந்த காலம் இளையராஜாவின் திரைப்பட இசை "உடுக்கடி" என்றே சொல்ல வைத்தது. புதிய வார்ப்புகளில் நாயகி வில்லனிடமிருந்து தப்பி ஓடுகையில் உடுக்கு ஒலியே கொடுத்து பயமுறுத்தியது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. இருந்தும் நிழல்கள், மெட்டி, காதலோவியம் கிழக்கே போகும் ரெயில் போன்ற படங்களில் பின்னணியிசையை மிகப் பிரமாதமாகத் தந்திருந்தார். – அதெல்லாம் ஒரு காலம்.

பொதுவாக திரை இசை ரசனை என்பது இளம் பிரயாயத்துடன் மிக மிக சம்பந்தமுடையது. பதினைந்து வயது முதல் முப்பந்தைந்து வயதுக்கிடையிலானவர்களை திரை இசை மிக இலகுவில் கவர்வதுமுண்டு. அவர்களிடம் தங்கிக் கொள்வதுமுண்டு.

இப்பிராயத்தவர்க்கு ரசிப்பதற்கு முதியவர்களிலும் போதிய அவகாசமுண்டு. ஏனைய வாழ்க்கைப் பிரச்சனைகளில் கூடுதலாக அந்நியமாகாமல் இருப்பவர்கள் இவர்கள். இதனால் இப்பிராயத்துள் இரசிக்கப்படுபவைகள் பசுமரத்தாணி போல் மீதிப்பிராயங்களிலும் காணக் கிடக்கும். இதனால் தானே இப்பிராயத்தில் ரசிப்பவைகள் தான் தரமானவைகள் என்று பின்னாளில் சொல்ல நேர்கிறது– அதனால் தானே திராகராஜபகவதர் காலப்பாடல் தான் தாத்தாமாருக்கு இன்னும் இனிக்கிறது.

இதே போல் நாம் ரசித்த இளையராஜா பாடல்கள் இக்கால இளம் பிராயத்தவர்கள் ரசிக்கும் ரகுமானின் பாடல்களால் மாற்றீடு செய்யப்படும் போது – இந்த இரண்டுங் கெட்டான் கால கட்டத்தில் நாம் தவித்துக் கிடக்க வேண்டியது தானா?

இப்போது உண்மை அப்படி அல்ல, காலத்துடன் ரசனையை மாற்றீடு செய்ய வேண்டியிருக்கிறது .

எம்.எஸ்.வி செய்த தவறை இளையராஜா செய்யும் போது.......... அது என்ன தவறு?

எம்.எஸ்.வி கொடி கட்டிப் பறந்த காலத்தில் "தான் இசையமைப்பதைத்தானே இந்தக் கூட்டம் ரசிக்க வேண்டியிருக்கிறது என நினைத்துக் கொண்டதாலோ என்னவோ ஒரு கட்டத்தில் திறமையை வளர்ப்பதை விட்டு தந்திரத்தால் மட்டும் இசையமைத்துக் கொண்டதால் புதிய தலைமுறைக்கு தேவையான மாறுதலைப் பற்றிச் சிந்திக்காது அசட்டையாக இருந்து விட்டார். நடந்தது என்ன? ....... அந்தக்கால கட்டத்தில் புதிய முயற்சியுடன் புகுந்த இளையராஜாவின் உழைப்பு எம்.எஸ்.வி ஐ ஓரங்கட்டிவிட்டது. –இப்போது இளையராஜாவின் முறை. · ரகுமானிடம் இழந்து விடுவாரா?

ABBA, BONEYM என்பன இளந்த தமிழர்களின் செவிகளையும் கால்களையும் ஆட்டி வைத்துக்கொண்டிருந்த காலம் அந்நாளைய தமிழ்த் திரைப்படப் பாடல்கள் இதற்கு ஈடு கொடுத்துக் களைத்துக் கொண்டிருந்த வேளை: சமயோசிதமான மாறுதல் முயற்சியில் இளையராஜா இறங்கினார். பிறநாட்டார் இசைச் சாயலில் தமிழ்த் திரைப்படப் பாடல்கள் வெளிவந்தன. இதனை அம்பலப்படுத்திய இலங்கை வானொலிக்கு அதனை நிறுத்தும்படி மன்றாடிக் கேட்டதாகவும் கேள்வி! இத்தகையதாய் தனது இடத்தை தக்க வைத்துக் கொள்ள பிரயத்தனப்பட்டுக் கொண்டவர் இப்போது சறுக்கி விடுவாரா?

ரகுமானின் ஆரம்பம் இளையராஜாவின் தளபதிப் படத்தின் சாயலில் தான் இருந்தது. இருந்தும் இசை சேர்ப்பதில் இருந்த இனிமை, மெல்லிய, நுண்ணிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒலிகளையும் இனிமையாய்க் காட்டிய சாமார்த்தியம் இன்றைய தலைமுறையினருக்கு கிறக்கத்தைக் கொடுத்து விட்டது.

"ஜால்ராவின்" இசை ஒலியை தெளிவாகக் கேட்ட இன்றையவர்கள் இசையின் இன்னொரு புறத்தைக் காட்டிவிட்டதாக ரகுமானை உச்சிமோர்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் இளையராஜா தெம்புடன் நிமிர்வாரா?

"இசையில் நாங்கள் ஏதும் புதுசாய் செய்யவில்லை, எல்லாம் ஏற்கனவே உள்ளவைதான், உள்ளதை வைத்துக்கொண்டே புதுசுபோல பொலிஷ் பண்ணிவிடுவோம், அவ்வளவுதான்" இதை அப்படியே ஒப்புக் கொண்டும், பரகசியமாகவும் சொன்னவரும் இந்த இளையராஜாதான். மேலும் "இந்த இந்தச் சூழ்நிலையில் இன்ன இன்ன ராகந்தான் என வைத்துக் கொள்வதில் எனக்கு உடன்பாடில்லை, என்ன ராகத்தையும் சூழ்நிலைக்கு தகுந்து கொடுக்கலாம்– அது அவனவன் திறமை, தைரியம்." இதனைச் சொன்னவரும் இந்த இளையராஜாதான். – இவர் இப்போது சறுக்கிவிடுவாரா?

எம்.எஸ்.வி, கே.வி.எம் காலத்தில் வானொலி உள்ள வீடுகளே சொற்பந்தான், இருந்தும் ஒலிபெருக்கிகளும், வானொலி நிலையங்களும், (குறிப்பாக இலங்கை வானொலி நிலையம்) பாடல்களை மக்களிடம் சேர்த்தன. அப்போது தமிழ்த் திரைப் படங்கள் வரும் வேகம் குறைவு, பாடல் மக்களைக் கிட்டும் வேகம் குறைவு. இருந்தும் வருபவை சரியாக இடம்பிடிக்க இவ் அவகாசம் ஒரு வகையில் உதவியது.

அதன் பின் வேகமாகின. வானொலியுடன் ஒலிப்பதிவு நாடாக்கள் கூட வீட்டுக்கு வீடு சாதாரணமானது என ஆனது. இதற்கு ஈடுகொடுக்க இளையராஜா கடுமையாக உழைத்தார். தொழில் நுட்ப வளர்ச்சியின் தேவைக்கமைய ஸ்ரீரியோ இசைச் சேர்க்கையைக் கூட தமிழில் படத்தில் (பிரியா) அறிமுகமாக்கிக் கொண்டார். அது மட்டுமல்லாமல் பின்னாளில் KEYBOARD மூலமான இசையமைப்பையும் (புன்னகை மன்னன்) ஆரம்பித்து வைத்தார்– இப்போது இவர் தோற்றுவிடுவாரா?

இளையராஜா திரைக்கு வந்திருந்த காலத்தில் ஏற்கனவே அங்கிருந்த எம்.எஸ்.வி, கே.வி.எம் அதன் பின்னர் சங்கர்–கணேஷ் கூட ஏதோ ஒரு வகையில் பாடல்களின் தன்மையில் அடிப்படை ஒற்றுமையைக் கொண்டிருந்தனர்– இவர்களை வேறுபடுத்தியது ஒலிப்பதிவு முறையும், இசைச் சேர்க்கையும், இசைக் கருவிகள் தெரிவுந்தான்.

ஆனால் இளையராஜாவோ எல்லாவற்றிலும் வேறுபட்டுக்கொள்ளும்வகையில் புதிய அணுகுமுறையைக் கடைப்பிடித்தார், படிப்படியாக அதன் வழியில் தனக்கெனத் தனியிடத்தையும் கைப்பற்றிக் கொண்டார்.

கே.வி.எம் இன் இசையமைப்பில் அதிக இசைக் கருவிகளின் ஒலிகள் ஒன்று கலந்து கொள்ளாது. பாடகர்கள் குரலை ஊடறுத்து பின்னணி இசை வருவதில்லை, தாளங்கள் தணிந்த ஒலியில் பாடல்களின் பின்னணியில் இருக்கும் சரணம் பல்லவி, அனுபல்லவிகளுக்கான இடைவெளியில் தான் இசை உரத்து வரும், இருந்தும் ஒவ்வொரு கருவியின் இசையும் தெளிவாக வரும். – ஒரு வாத்திய இசை இன்னொரு கருவியின் இசையை இம்சிப்பதில்லை.

எம்.எஸ்.வி இன் இசையமைப்பு கொஞ்சம் மாறுபட்டது. மொத்த பின்னணி இசையும் மெதுவாய் தணிந்து ஒலித்துக் கொண்டிருக்க பாடகர்கள் குரல் அதனிலும் மேலால் கேட்கும் குரல்களின் இடைவேளைகளில் இசை உரத்து வரும்– தாள வாத்தியம் தனித்துக் கேட்கும் ஏனைய இசைக் கருவிகளின் இசை ஒரே நேரத்தில் ஒத்து எழுந்து இசைக் கோலத்தை தரும்– ஆதலால் தேறிய இசையின் வெளிப்பாடே பின்னணி இசையாக இருக்கும்படி எம்.எஸ்.வி இசையமைப்பார்.

ஆனால் இளையராஜா எல்லாவற்றுக்கும் மேம்பட்டதாய் இசையை– ஒலிப்பதிவை இசைச் சேர்க்கையை அமைத்துக் கொண்டார். ஒவ்வொரு இசைக் கருவியின் இசைக்கும் முக்கியம் கொடுக்க முயன்றார். இதனால் ஒவ்வொரு வாத்தியத்தினின்றும் பிறக்கும் சிறிய இசை ஒலியை சிறு கணத்திற்குப் பயன்படுத்தும் வேளை இன்னொன்றை அதன் தொடர்ச்சியாக வரக் கூடியதாக, ஆக ஒவ்வொரு வாத்திய இசைத் துணுக்கும் சேர்ந்து ஒரு இசைக் கோலத்தை கொடுக்கக்கூடியதாக இசையைத் திட்டமிட்டார். பாடகர்கள் வார்த்தைகளின் உச்சரிப்புகளுக்கிடையே மூச்சு எடுத்துக் கொள்ளும் மிக மிகச் சிறிய இடைவெளிகளுள் இசையை நுழைந்து நிரப்பிவிடும் கெட்டித்தனம் (KEYBOARD இல் தொடுமுன்வரை ) இந்த இளையராஜாவுக்கே உரியது.

இத்தகைய இளையராஜா, கிரேக்க, எகிப்திய இசைப் பாணியில் இசையமைத்துக் கொள்ளும் ரகுமானிடம் தனது இடத்தை விட்டுவிடுவாரா?

ஏழெட்டு ஆண்டுகளின் முன் நிதி திரட்டும் நிகழ்ச்சி ஒன்றில் எல்லா இசையமைப்பாளர்களும் (T.R.R தவிர) சேர்ந்து ஒரு இசை நிகழ்ச்சியை நடத்தியிருந்தனர் அதில எம்.எஸ்.வி "மெல்லத்திறந்தது கதவு" படத்தில் தான் ஒரு பாடலுக்கு இசை கூட்டிக் கொண்டிருந்த வேளையில் ஒரு இடத்தில் சிக்கலப்பட்டாராம், அப்போது அருகில் இதனை அவதானித்திருந்த இளையராஜா மிகச் சாதாரணமாகவும், தயவாகவும் இப்படி வைத்தால் எப்படி எனக் கூறித் தன் சிக்கலை நீக்கியதாக, இளையராஜாவின் சாதுர்யத்தை மெச்சினார். இத்தகைய இளையராஜா கவிழ்ந்து விடுவாரா?

வைரமுத்து– இளையராஜா அணி பிரிந்த போது 'இளையராஜா தானில்லாமல் வீழப் போவதுமில்லை, இளையராஜா இல்லாமல் தான் வீழப் போவதுமில்லை, ஆனால் தாம் இணையவும் போவதுமில்லை, ஏனெனில் இருவரும் வேறுவேறு திசையில் ஓடுகிறார்கள்' என வைரமுத்து குளத்தில் இருந்து எடுத்த கல் சொன்னது. ஆனால் உண்மையில் இருவரும் இணைந்திருந்த போது இருவருக்கும் புகழ் சேர்ந்தது. எமக்கு சந்தோசமான ரசனை கிட்டியது. இப்போது வைரமுத்து ரகுமானுடன்... இளையராஜாவுக்கு விழுக்காடா?

இளையராஜா கர்வமானவர் என்றனர், தனக்கு ஒரு பாடல் வேண்டும் என்பவர், பெரும் இயக்குனர்களுடன் பிணங்கிக் கொண்டவர், 'எங்கே ஓடுவார், எங்காவது போய் முட்டத்தானே வேண்டும்' என்ற டி.எம்.எஸ் சாபத்தை சுமப்பவர் என்றெல்லாம் சொல்கிறார்களே, இதனால் இளையராஜா ஒரு எல்லைக்கு வந்து விட்டார் எனலாமா?

இந்தக் கேள்விகள் எல்லாம் இளையராஜாவுக்கும் எழுந்திருக்கும்.. கேள்விகள் தானே. பல எழுச்சிகளுக்கே அடித்தளமாக இருந்திருக்கிறது என்பது கூட ஒரு நம்பிக்கை தான்.

**-அருண்-**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்-

# ஏ.ஆர்.கே மார்க்கட்

★ இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
★ பால் பழங்கள்,
உடன் மரக்கறி வகைகள்,
★ இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
★ கனடிய உணவுப் பொருட்கள்

## அனைத்தும் மலிவு விலையில்

★ தமிழ், ஹிந்தி வீடியோப் படங்களின்
ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும்
விற்பனைக்கும் பெறலாம்
★ CD, Audio மலிவு விலையில்

# A.R.K MARKET

31-35 St.Dennis Dr
(Don Mills/Eglinton)
(416) 421 3429

தாயகம்

அறு(சு)வை




# வாழ்வைத் தொலைத்த பத்தாண்டுகள்

அறுஞர் போராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

இப்போதெல்லாம் ஊருக்குப் போய் வந்தவர்கள் எல்லாம் சுத்துப் பயண இலக்கியம் எழுதும் போது கியூறியஸ்க்கும் பயண இலக்கியம் எழுத வேண்டும் என்று நிறைய ஆசை. சுத்துப் பயணக் கட்டுரை எழுதியவர்கள் எழுதிய புத்தகங்களின் காசை வசூல் பண்ணுமலே தலைமறைவாகிய நிலையில் உள்ளார்கள். அவர்களைத் தேடுவதே ஒரு தேடல் இலக்கியமாகி விடும்.

எதற்கும் ஒரு தடவை ஊருக்குப் போய் வந்து நாமும் ஒரு கதை விடலாமா என்றால்.. எம் பெருமான் அனுக்கிரகம் கிடைக்க மாட்டேன் என்கிறது. (எம் பெருமான் என்பது நீங்கள் நினைக்கும் எம் பெருமான் அல்ல!) ஜென்ம விருச்சிக ராசியில் வியாழன் புகுந்த நிலையில் காடு போகலாம் என்றால் அதற்கு ஏதாவது சுக்கிரன் பார்வை கிடைக்காமல் போயிருக்க வேண்டும்.

ஊருக்கு போய் வந்து சுத்துபவர்களில் முக்கியமாக, லண்டனின் பிரபல வானொலி நிலைய அறிவிப்பாளர் சமீபத்தில் குகைக்குள் சென்று பேட்டி எடுத்து வந்திருந்தார். அன்னார் பற்றி கவுன்ரர்பொயின்ரில் எழுதியிருந்தார்கள்.

நடுநிலைக்கு பெயர் போனது லண்டன் ஒலிபரப்பு நிலையம். ஆனால் அங்கு வேலை செய்யும் நம்மவர்கள் அப்படியல்லவே. சிங்கள சேவையான சந்தேசயவில் பணி புரிந்த வசந்தா ராஜா ரூபவாகினிக்கு தலைவராக நியமிக்கப்பட்டதும் அவர் கிட்டத்தட்ட பிரேமதாசாவுக்கு ஏ.ஜே.ரணசிங்க மாதிரித் தான். சந்திரிகா புகழ் பாடுவதும் அடிக்கடி ரூபவாகினியில் சந்திரிகாவை பேட்டி எடுப்பதும் தான். ஆனால் பத்திரிகையாளர்கள் பேட்டி எடுப்பதில் தப்பில்லை. ஆனால் இவர்களின் கேள்விகள் எப்போதுமே தலைவர்களைப் பாதுகாக்கும் நோக்கில், எதிரணியினரின் குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்ல வாய்ப்பளிக்கும் நிலையில் தான் இருக்கும். கிட்டத்தட்ட ஆளுபவர்களின் பிரசாரக் கருவிகளாகத் தான் இந்த பத்திரிகையாளர்கள் செயற்படுகிறார்கள். ஒரு கட்டத்தில் பத்திரிகையாளர்களின் ஆட்சேபம் காரணமாக அமைச்சர் ஒருவரே வசந்தாவைக் கண்டித்ததாக தகவல்.

இதே போல நம்ம தமிழ் சேவையைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் வரை போனது நம்மவரின் விலாசம் எழுப்பத்தான். ஒரு புறத்தில் லண்டன் சிங்கள சேவையைச் சேர்ந்தவர் சந்திரிகாவையும் மறுபுறத்தில் லண்டன் தமிழ் சேவையைச் சேர்ந்தவர் நம்மவரையும் புகழாத குறை. தமிழ் சேவையினர் கேட்ட கேள்விகளும் கிட்டத்தட்ட புலிகளை நியாயப்படுத்தத் தான்.

அஷ்ரப்பைச் சந்தித்த போது 'நீங்கள் (கட்சி) தாவ தயாரா?' என்று கேட்ட போது அஷ்ரப் பதிலடி கொடுத்தாராம்... தாவுவது குரங்குகள் தான். நாங்கள் குரங்குகள் இல்லை, மனிதர்கள் என்று. மற்ற அமைப்புகளை சந்தித்த போது நீங்கள் எப்படி தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறலாம் என்று கேட்கப்பட்டது. ஆனால் புலிகளிடம் அந்தக் கேள்வி இல்லை. என்ன தான் இருந்தாலும் மற்றக் குழுக்கள் தேர்தலில் நின்று (எப்படி என்பது வேறு கதை) பாராளுமன்றம் சென்றவை. குறைந்த பட்சம் மக்களைச் சந்திக்க தயாராய் இருந்தவை. ஆனால் பிரபாகரனைச் சந்தித்த போது கேட்ட கேள்விகளும் பதில்களும் ஏற்கனவே ஒத்திகை பார்த்தது போலத் தான். இவர் தாண்டிக்குளத்திற்கு அப்பால் போன போது வழமையான புலிக்குட்டிகள் அவரையும் சோதனையிட முயன்ற போது அவர் கடும் கோபத்துடன் அதற்கு மறுத்ததுடன் தனது பைகளில் உள்ளவை பிரபாகரனுக்கு நேரடியாக தான் எடுத்துச் சென்று கொடுக்க வேண்டிய பொருட்கள் என்று கூறி சோதனைக்குள்ளாக மறுத்து விட்டதாக கவுன்ரர்பொயின்ற் கூறியிருக்கிறது.

★ ★ ★

தலைவரைச் சந்தித்த இந்த அறிவிப்பாளரை கியூறியஸ் பேட்டி கண்டதை நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள். கியூறியஸை நீங்கள் விளையாட்டாய் நினைத்திருப்பீர்கள். அவன் லேசுப்பட்ட ஆளில்லை. உலகச் செய்திகளை அறியும் ஆர்வத்தில் கியூறியஸ் ஒரு விலையுயர்ந்த வானொலியை வாங்கி (இது பற்றி பின்னால்!) பி.பி.சி தமிழோசையை கனடாவில் கேட்க முயன்றான். இங்கே கோடை, பனி கால நேர மாற்றத்தால் சரியான நேரமும் அலைவரிசையும் தெரியவில்லை. உடனே கியூறியஸ் அடித்தான் பி.பி.சிக்கு. விடயத்தை சொன்னதும் தமிழ் சேவைக்கு தொடுத்து விட்டார்கள். உடனே.. அன்புடன் விளித்து விடயத்தைக் கூறியதும் அன்னார் அலைவரிசையின் இலக்கம் தந்தார்... ஏதோ மீட்டரில். அதை வைத்து நான் என்ன பண்ண முடியும்? நம்ம ஊர் வானொலி என்றால் உருட்டிப் பிடிக்கலாம். கிலோ ஹேர்ட்ஸில் கேட்டேன்.. அன்னார் தனக்கு தெரியாதென்றார். இது டிஜிடல் வானொலி.. பட்டன்களை அழுத்தி டியூன் பண்ணலாம். என்ன செய்வது?

**'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'**

www.tamilarangam.net 

இப்போதைய நிலையில் தமிழோசையைக் கேட்பதிலும் பார்க்க, சிரமமில்லாமல் புலிகளின் தொலைபேசி செய்தியைக் கேட்பது நன்றெனப்படுகிறது. (இந்த ரேடியோ விவகாரத்தை எழுதி மறுநாள் ரேடியோ வெரித்தாஸ் தனது கலண்டரும் அனுப்பி புதிய அலைவரிசை, நேரங்களும் அனுப்பி வைத்திருக்கிறது)

★ ★ ★

இப்படியாக போய் வந்தவர்கள் எல்லாம் 'நான் கண்ட தமிழீழம்' என்று எட்டாம் வகுப்பில் கட்டுரை எழுதிய மாதிரி விளாசித் தள்ளுகிறார்கள். தற்போதைய நிலையில் கியூறியஸ்க்கு அந்தப் பாக்கியம் கிட்டப் போவதில்லை. எந்தப் பயணக் கட்டுரையை எழுதலாம் என்று நினைத்துப் பார்த்தால்...

இந்த பொங்கல் விழாவுடன் கியூறியஸ் நாட்டை விட்டு வெளியேறி பத்தாண்டுகள் நிறைவு பெறுகின்றன. அதற்கிடையில் உங்கள் அனைவருக்கும் என் இனிய எருமைப் பொங்கல் வாழ்த்துக்கள்.. தாயகம் கையில் கிடைக்கும் போது தைப் பொங்கல், மாட்டுப் பொங்கல் எல்லாம் முடிந்திருக்கும் என்பதால் அவை முடிந்ததும் உங்களுக்கும் எனக்கும் தான் பொங்கல் விழா என்பதால் எங்களை நினைவு கூர்ந்து எருமைப் பொங்கல் வாழ்த்துக்கள்.

கியூறியஸின் வாழ்வு தொலைக்கப்பட்ட பத்தாண்டை முன்னிட்டு, தனது வெளிநாட்டுப் பயணக் கதையை கியூறியஸ் எழுதுவதாக உத்தேசம். முன்னமே சொல்லி வைக்கிறேன்.. 'மேற்படிப்புக்காக வெளிநாடு பயணமானார்' என்று யாரும் வீரகேசரியில் என் படத்தைப் போட்டு எழுதி பதினைந்து நிமிடப் புகழ் தரவும் இல்லை. யாரும் என்னை விமானத்தில் கண்டு 'ஆர் யூ புறொம் யாழ்ப்பாணம்?' என்று கேட்கவும் இல்லை. யாராவது டாக்ஸிக்காரன் தன் உடைந்த ஆங்கிலத்தில் தனது நாட்டைப் பற்றி விபரிக்கவும் இல்லை. ஜேர்மனியில் யாராவது தமிழ் பேராசிரியர் வீட்டில் நான் மீன் குழம்பும் சோறும் சாப்பிடவும் இல்லை. தாய் நாட்டில் இருந்து யுத்தத்தினாலும் பொருளாதார நலன் நாடியும் சென்ற லட்சக்கணக்கான அகதிகளில் நானும் ஒருவனாகத் தான் எந்த விலாசமும் இல்லாமல் சென்றவன்...

★ ★ ★

முதல் நாள் பொங்கல் சாப்பிட்டாயிற்று. பயணத்திற்கு முன்பாக என்னுடைய கதைகள், சஞ்சிகைக் கட்டிங்குகள் (டைம், நியூஸ்வீக் சஞ்சிகைகளில் இருந்து சினிமா பற்றி சேர்த்தவை) நான்கு வருட டயறிகள் (பெண்ணைப் பார்த்து கண்ணடித்தது முதல் சைக்கிளுக்கு காற்றடித்த வரையிலான சகல விபரங்களும் உள்ளடக்கியது), சேர்த்த புத்தகங்கள், பால்ய காலத்து போட்டோக்கள், மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள் முதல் Introduction to Psychology வரையிலான புத்தகங்கள் உட்பட என்னுடைய சேமிப்புகளை ஒரு காலப் பெட்டகத்தில், அதாவது ஒரு ட்ரங்க் பெட்டியில் அடுக்கி 'இதை நான் திரும்பி வரும் வரை யாரும் திறக்கக்கூடாது' என்ற உறுதி மொழி பெற்றுக் கொண்டாயிற்று. (நிலைமை மோசமானால் ஒரு காலத்தில் ஒரு ஹெலிகொப்டரை வாடகைக்கு பிடித்து இதை கடத்தி வருவதாக உத்தேசம்)

போய் பயணம் சொல்ல வேண்டியவர்களுக்கு எல்லாம் சொல்லியாயிற்று. நாட்டை, உறவினர்களைப் பிரிந்து போகிறேன் என்ற கவலை எதுவும் சிறிதும் இல்லை. புதிய வாழ்க்கை ஒன்றுக்கான படி என்று மட்டும் நினைத்துக் கொண்டேன். இந்த மண்ணுடன் எனக்கு எந்த சென்டிமென்டலான உறவும் உணர்வும் இல்லை. இந்த மண்ணுக்கு நான் அன்னியன். 'எந்த தீர்க்கதரிசியும் தன் சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை' என்ற பைபிள் வாக்கியம் தான் எனக்கு எப்போதுமே மனதில் இருந்தது. ஆனால் செம்பாட்டு மண் படிந்த என் சைக்கிளை மட்டும் விட்டு வர மனம் பொறுக்கவில்லை. சொந்த உழைப்பில் வாங்கி, மழையின் போது மண்ணில் புதையும் கணங்களில் மழைநீரால் மட்டுமே கழுவப்படுகின்ற என் சைக்கிள்..

வீட்டில் கூட்டம், சகோதரர்கள் குடும்பத்தினர், தந்தையார், பேத்தியார்.. அக்கா மட்டும் இல்லை... அக்கா கணவன் வீட்டில். எனக்கு அம்மா போன்றவர் இந்த அக்கா. எல்லாரையும் கட்டியணைத்து முத்தம் கொடுக்க.. ஒவ்வொருவராய் கண் கலங்கினர். இந்த அவசரத்தில் அண்ணனை மறந்து விட்டதால் அண்ணன் கண் கலங்க.. கட்டி ஒரு முத்தம். மலை கலங்கினாலும் தன் நிலை கலங்காதவன் கியூறியஸ்.. ஆச்சியைக் கட்டிப் பிடித்து கொஞ்சும்போது மட்டும் இருவரும் அழுதோம். பிள்ளைகளே இல்லாமல் என்னை தங்கள் பிள்ளையாக வளர்த்தவர்கள். கல்லாநிதி உன் மனம் கல் இல்லையடா. திரும்பவும் போய் ஆச்சியைக் கட்டிப்பிடித்துக் கொஞ்சி 'நான் வரு மட்டும் சுகமாயிருங்கோ'..

பைக்குள் பாதிக்கு மேல் புத்தகங்கள்... தமிழ் அகராதி முதல் கொண்டு Why am I afraid to tell you who I am என்ற புத்தகம் வரை. வழமை போல என் டெனிம் ஜீன்ஸ்.. ஈராக் போன அண்ணனிடம் கடன் வாங்கி இன்று வரை பத்திரமாக வைத்திருக்கும் சேட், இந்தியாவிலிருந்து வந்த அண்ணனிடம் கடனாய் வாங்கிய சப்பாத்து.. ஈராக் போய் சம்பாதித்த பணத்தில் வேலை வெட்டி இல்லாமல் எந்தப் பயனும் இன்றி இருந்த என்னை வெளிநாட்டுக்கு போக அக்காவின் கணவர் தந்த பணம்.. இன்னொரு அக்காவின் கணவர் ஏஜன்ட் ஆக வேலை செய்ததால்... டிக்கட் காசுடன் ஜேர்மன் போக.. பாரத் ஸ்டுடியோவில் எடுத்த படம் சகிதம் பாஸ்போட்... நான் ரெடி.

முன் வீட்டில் புதிதாய் குடிவந்து எங்களுக்குள்ளே அன்பாக மாமி என்று அழைக்கப்படும் மாமிக்கு பயணம் சொல்ல தோன்றிய போதிலும் இது வரை காலத்தில் கதைக்காததால் ஏற்பட்ட கூச்சம்.. சொல்லவில்லை. என்னோடு இரவுகளில் தோட்டங்களில் முந்திரிப் பழம் பிடுங்கவும், காதல் பற்றியும் வாழ்வு பற்றியும் பேசவும் கடையில் பாண் வாங்கி வீடுகளில் கறி வாங்கி சாப்பிட்ட நண்பர்கள் பயணம் அனுப்ப வந்திருந்தார்கள்.

மூன்று வாரங்களுக்கு முன்பாக போய் மாஜிக் காதலி தூர்ப்பநகாவுக்கும் சொல்லியாயிற்று.

நான் வெளிநாட்டுக்குப் போகப் போறன்..

நீங்கள் உப்பிடித்தானே எப்பவும் சொல்லிறியள்.. அவளுக்கு கிண்டல். இப்போது வெளிநாட்டிலிருந்து கடிதம் போகும் போது ஆச்சரியப்படப் போகிறாள். முதன் முதலாக வெளிநாட்டுக்குப் போகப் போகிறேன் என்ற போது 'என்னை விட்டுப் போக வேண்டாம்' என்று கட்டியணைத்து அழுதவளல்லவா அவள்!

★ ★ ★

சில தினங்களுக்கு முன்னர் தான் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையம் டெலோவின் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தது. தடைப்பட்ட புகையிரதப் பயணம் பளையில் இருந்து தான் ஆரம்பம். வழியில் இராணுவத்தினர் எங்களைப் பிடித்துக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

கொண்டாலும் என்பதற்காக எங்களுக்கு துணையாக அக்காமார் இருவர். எல்லாம் காலம்.. முன்பு அவர்களுக்கு காவலாக நாங்கள் போனது போய் எங்களுக்கு காவலாக அவர்கள்.

கொழும்பில் வழமை போல லொட்ஜ் வாசம்... அங்கே இரண்டு நாட்கள் நிற்க.. மேல் வீட்டில் நின்று பார்க்க.. ஒரு சிங்களவருக்கும் முஸ்லிமுக்கும் கீழே சண்டை.

உன்னை புலியைக் கூட்டி கொண்டு வந்து அடிப்பன்டா.. இது முஸ்லிம்.

எனக்கு புலி பயம் இல்லே.. இது சிங்களவர்.

ஓம்.. அதுதானே அண்டைக்கு ஓடினனீ.. இது முஸ்லிமின் கிண்டல். 83 கலவரத்தில் கொட்டியா ஆவா வின சிங்களவராக இருக்க வேண்டும்.

டிக்கட் ஓகே பண்ணி எமது பயணம் ஆரம்பமாகிறது. கியூறியஸும் அவனது நண்பன் ஒருவனுமாக பேர்லின் பயணம்.. என்னருமைத் தாய் நாடே... இரு கரம் கூப்புகின்றேன்.. குட்பை அம்மா...

★ ★ ★

எயர் லங்கா விமானம்.. ஆஸ்திரியா வரை பறக்கிறது. கொழும்பே சரியாகத் தெரியாது. புகையிரதத்தில் ஏறிய தடவைகளே விரல் விட்டு எண்ணக் கூடியன. ஆனல் விமானத்தில் முன்னர் கேள்விப்பட்டிராத நாட்டுக்குப் பயணம்... விமானத்தில் வழமை போல தமிழர்கள் நிரம்பி வழிகின்றனர். வழமை போல அவர்கள் சத்தம் போட்டே பேசுகின்றனர்... எங்கே போனலும் தமிழனுக்கு அப்பே ஆண்டுவ தான். கொஞ்சமும் இங்கிதம் தெரியாது. பக்கத்தில் மற்றவன் நிற்கும் சிந்தனை கிடையாது. சத்தம் போட்டுத் தான் கதைப்பான்.

விமானத்தில் வாசிக்க சஞ்சிகைகள் தந்தார்கள். பலர் பயத்தில் தொடவில்லை. ஏதோ ருசிக்காத சாப்பாடு தந்தார்கள். தந்த போஸ்ட் காட்டில் சூர்ப்பநகாவுக்கு ஒரு சிறு பிரியாவிடைக் கடிதம். நிச்சயமாய் போய் வீட்டில் கிடைத்த போது அடி விழுந்திருக்கும்.

வியன்ன விமான நிலையத்தில் கொஞ்ச நேரம் தரிப்பு. அங்கே சாப்பிடப் பணம் கிடையாது. கையில் இருப்பது அறுபது ஜேர்மன் மார்க்குகள் மட்டும் தான். விமான நிலையத்தில் எங்களை ஏதோ பயங்கரவாதிகள் மாதிரி நினைத்தோ என்னவோ, ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் இயந்திரத் துப்பாக்கிகளுடன்.. எங்கு போனலும் துன்பம் தான். ஊரிலும் அதே நிலை. வெளிநாட்டிலும் அதே நிலை.

ஆங்கிலப் படங்களில் பார்த்து ரசித்த பனியை கைகளால் தொட முடிந்தது முதன் முதலாக.

★ ★ ★

அங்கிருந்து போலந்து விமானச் சேவையில் வார்சோ பயணம்.. ஏன் இப்படி மூக்கைச் சுற்றி தொடுகிருர்களோ புரியவில்லை. நேரடியாக கிழக்கு பேர்லின் போகாமல்... விமானம் ரஷ்யத் தயாரிப்பு. நம்ம ஊர் தட்டி வான் மாதிரி. . ஒரு மணி நேரப் பயணத்துக்குள் ஒரு சாப்பாடு. . எக்கச்சக்கமான தமிழ் சக பயணிகள்... வார்சோவில் ஒரு இரவு தங்கல்.. ஒரே குளிர். விமான நிலையத்தில் அகதிகள் போல பைகளை அருகில் வைத்துக்கொண்டு போர்த்தபடியே உறங்கல்... விமான நிறுவனங்கள் ஹோட்டலில் தங்க வைக்கும் என்று கேள்விப்பட்டதெல்லாம் மனிதர்களுக்குத் தான், அகதிகளுக்கு அல்ல என்று புரிந்தது.

அங்கிருந்து கிழக்கு ஜேர்மன் விமானத்தில் கிழக்கு பேர்லின் பயணம். அது கூட ஒரு மணி நேரம் தான். போய் இறங்கியதும் கண்ணைக் கட்டி காட்டில் விட்ட மாதிரி.. நல்ல காலம் ஏற்கனவே போய் இருந்த மைத்துனர் ஒருவர் படம் எல்லாம் கீறி கடிதம் எழுதியிருந்தார். அது கியூறியஸின் கையில் இருப்பதாகக் கண்டதும் கியூறியஸ் உடன் ஏகப்பட்ட கூட்டம் சேர்ந்தது. இதற்குள் கியூறியஸ் வேறு ஜேர்மன் மொழியில் கதைக்கிருன் என்றதும் போதுமே.. உடனே அண்ணை போட்டு தலைவனுக்கி பின்னல் வரத் தயாரான கூட்டம்.. போகும் இடங்களில் ஜேர்மன் மொழியில் பேசுவதைக் கேட்டு அதிகாரிகள் கேட்ட கேள்வி 'முன்பு ஜேர்மனியில் இருந்தாயா?' என்பது தான்.

எல்லையைக் கடந்து மேற்கே வந்ததும் வந்தவர்களை வரவேற்கவும் அவர்களுக்கு flea market இல் வாங்கிய பாவித்த கோட்டுகளை விற்கவும், அவர்களின் டொலர்களை ஏமாற்றி வாங்கவும் இடமில்லாதவர்களுக்கு உண்மையான உதவி செய்யவும் என்று பலதரப்பட்ட தமிழனைச் சுத்தும் தமிழர்கள் வரவேற்றனர். தமிழரின் லீலாவினேதங்களை ஏற்கனவே கேள்விப்பட்டதால், அவர்களைத் தவிர்க்க.. ஒரு ஈரானிய அகதியைச் சந்திக்க நேர்ந்தது. உண்மையாகவே வருகின்ற தன் நாட்டவருக்கு உதவி செய்வதற்காக அதில் நின்று கொண்டிருந்தார். அவரிடம் விடயத்தைச் சொன்னதும் தானே ஒரு புகையிரத வரைபடமும் தந்து, பொலிசாரிடம் பிடிபட்டால் அவர்கள் அனுப்பும் இடத்திற்குத் தான் போக வேண்டும், அது வரையும் பேர்லினில் அகதி முகாமில் தங்க வேண்டி வரும், எனவே கண்களில் படாமல் போய் சேருங்கள் என்று சொல்லி அனுப்பினர். இந்த விபரங்களை பின்னர் சந்தித்த மூன்று சிங்களவர்களுக்கு சொன்ன போது 'நீ வந்து கன நாளோ?' என்று கேட்க.. இல்லை, நானும் இப்போ தான் வந்தேன் என்று அவர்களிடம் படத்தைக் கொடுத்து வழியைக் காட்டி விட, அவர்கள் தாங்கள் ஒல்லாந்து போவதாக வழி கூறிச் சென்றார்கள்.

அன்னிய மண்ணில் இனம் தெரியாதவனும் எங்கள் நாட்டில் எதிரியாக இருப்பவனும் எங்களுக்கு நெருக்கமாகிருர்கள். எங்கள் மண்ணில் தான் எங்களுக்கு வாழ்வது கஷ்டமான நிலை. நம்மவர்களே நம்மவர்களைச் சுற்றும் போது அன்னியர்களே எங்களுக்கு உதவியும் பாதுகாப்பும் தருவது விசித்திரமானதாயில்லையா?

ஏற்கனவே வந்து பிடிபட்டு முகாமில் முப்பது மார்க்குகளும் கஞ்சியும் (சூப் தான்) குடித்துக் கொண்டிருந்தவர்கள் இதற்குள் யாரையாவது சுற்றும் நோக்கில் உலவிக் கொண்டிருந்தனர். தங்களிடம் டொலர்களை வைத்திருந்தவர்கள் கேட்டதற்கு இணங்க எல்லாருக்கும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸில் பணத்தையும் மாற்றிக் கொடுத்து திரும்ப.. பணம் கிடைத்தவர்கள் எல்லாம் டாக்ஸி பிடித்துக் கொண்டு ஒரு நன்றியோ, குட்பையோ கூருமல் மாறி விட்டார்கள். இதுதான்யா தமிழன். மற்றவனைப் பாவிப்பது எப்படி என்று சரியாகத் தெரிந்தவன். மிஞ்சியது கியூறியஸும் நண்பனும் தான். மற்றவர்கள் எல்லாருமே மாறி விட்டார்கள்.

புகையிரத நிலையத்திற்கு வெளியே வந்தேன்.. திசை தெரியாத நாட்டில் முகத்தைத் தொலைத்த மனிதனுக.

புதிய வானம், புதிய பூமி, எங்கும் பனிமழை பொழிகிறது, நான் வருகையிலே என்னை வரவேற்க வண்ண பூ மழை பொழிகிறது.. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# புதிய தீர்வுத்திட்டத்துடன் அருளர் கொழும்பில்..

சோவியத் உடைந்த பின்னர் உக்ரெய்ன் போன்ற நாடுகளுடன் ரஷ்யா செய்து கொண்ட உடன்படிக்கை போன்று பொதுநலவாய அமைப்பு ஒன்றை இலங்கையிலும் உருவாக்கி தமிழ் ஈழத்தையும் ஸ்ரீலங்காவையும் கொண்ட இரு அரசுகளின் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் திட்டத்தை தீர்வாக முன்வைப்பது குறித்து அருளர் கொழும்பு வந்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். பாதுகாப்பு உதவி அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, மற்றும் தமிழ் இயக்கங்கள், கட்சிகளுடனும் இவர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இந்த திட்டம் சமஷ்டி போன்று மாகாணங்கள் சேர்ந்திருக்காமல் சுதந்திர நாடுகள் சேரும் அமைப்பாக இருக்கும்.

இந்த திட்டத்தில் தமிழர்களுக்கு தலைவராக பிரபாகரனை ஏற்றுக் கொள்வது பற்றியே மற்ற அமைப்புகளுடன் அருளர் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். இந்த திட்டத்திற்கு புலிகளின் ஒப்புதல் கிடைத்திருப்பதாகவும் இதற்கான அரச தரப்பின் கருத்தை அறியும் நோக்கமே இது என்றும் கொழும்பில் கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது.

புலிகளின் அனுமதி இன்றி புலிகளின் கீழ் செயற்படும் அருளர் வந்திருக்க முடியாது என்றே கருதப்படுகிறது.

உத்தேச திட்டத்தின்படி இரு நாடுகளுக்கும் தனியான பாராளுமன்றம், பிரதமர் கொண்ட தன்னுதிக்க அரசு இருப்பதுடன் அவை சுதந்திரமாக பாதுகாப்பு, வெளிவிவகாரம் என்பவற்றில் தனிததுவம் கொண்டனவாய் இருக்கும். இந்த இரண்டு அரசுகளும் ஜனாதிபதியின் கீழ் கூட்டாட்சியாக இயங்கும். ஒரே நாணயமே பயன்படும். இரண்டு அரசுகளுக்கும் தனியான படை இருப்பதுடன் பொதுவான படை ஒன்றும் இருக்கும்.

பிரபாகரனை தேசியத் தலைவர் என்று ஏற்றுக் கொள்வது முக்கியமான அம்சமாக கருதப்படுகிறது. இவரிடம் தமிழீழத்தின் பாதுகாப்பையும் தமிழீழப் பகுதிகளையும் விட்டு விடுவது, வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேறுமாறு கோருவது, குறித்த காலத்தின் பின் தேர்தல் நடத்துவது போன்றனவே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

# கிளாலிப் பகல் பயணம் ரத்து

கடந்த திங்கட்கிழமை புலிகள் முதல் தடவையாக கிளாலிக்கூடாக பகல் நேரத்தில் பயணத்தை அனுமதித்தனர். நான்கு வருடங்களுக்கு பின்னர் முதல் தடவையாக இந்தப் பயணம் நடைபெற்றது. முதலில் ஞாயிறு தவிர்ந்த ஆறு நாட்கள் 200 படகுகள் சேவையில் ஈடுபடும் என்று புலிகள் அறிவித்திருந்த போதும் பின்னர் அதை ரத்துச் செய்திருந்தனர். தற்போது இரவுகளில் கிழமையில் மூன்று நாட்கள் நடைபெறும் என அறிவித்திருக்கின்றனர்.

# முன்னைய அமைச்சர்கள் மீது ஊழல் விசாரணை

முன்னைய அரசில் பணியாற்றிய அமைச்சர்கள், அதிகாரிகள் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணைகள் நடைபெற உள்ளன. இவர்கள் மீது கேள்விப்பத்திரங்களில் ஊழல் செய்தது, ஊழல் மூலம் பெருமளவு பணம் சம்பாதித்தது பற்றி விசாரணைகள் நடத்தப்படும். நிரந்தர ஊழல் பற்றி ஆணைக்குழுவே இது பற்றி விசாரிக்கும். வங்கிக் கணக்குகள், மற்றும் நிதி செயற்பாடுகள் பற்றி விசாரிக்கும் உரிமை இந்த குழுவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அத்துடன் சம்பந்தப்பட்டவர்களின் பாஸ்போட்டுக்களை பறிக்கவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பல அமைச்சுகள் தங்கள் அமைச்சுகளுக்குள் ஏற்கனவே நடைபெற்ற ஊழல்கள் பற்றி விசாரிக்க குழுக்களை ஏற்படுத்தியுள்ளன. இந்தக் குழுக்களின் கண்டுபிடிப்புகள் ஊழல் ஆணைக்குழுவுக்கு பாரப்படுத்தப்படும்.

*This newspaper is published by Georgicka communications. A member of Ethnic Press Council Of Canada. Editor: George R.Ckrhushchev*

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினல் வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

தொடர்புகளுக்கு
*Georgicka communications*
*P.O.Box 1031, Station "F",*
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216 @Compuserve.com*

வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை

## தாயகம் சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இலங்கை, இந்தியா, கனடா உணவுப் பொருட்கள்
அனைத்தும் ஒரே இடத்தில்! மலிவு விலைகளில்!!

# அன்ரனி பிறதர்ஸ்

முத்திரை, சிகரெட்,
போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்
TTC Tickets,
Lottery Tickets

உடன்
மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழ
வகைகள்


தமிழக,
இலங்கை,
கனடிய
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள்
அனைத்தும்

★ மலிவு விலையில்
லேசர் இசைத்தட்டுக்கள்
★ தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள் வாடகைக்குப் பெறலாம்

## ANTONY BROTHERS

வாரத்தில் 7 நாட்களும்
காலை 9 மணி முதல்
இரவு 11 மணி வரை

1472 Queen St West (Queen/Lansdowne)
Toronto, Ont. M6K 1M4
TEL:(416) 588-0733
TEL/FAX:(416) 516 3903




## ANTONY BROTHERS FASHION HOUSE

1484 QUEEN ST WEST
Tel:(416) 588 0310

சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
ஆண்கள், பெண்கள்,
குழந்தைகளுக்கான
உடைகள்

சுவாமிப் படங்கள்,
பரிசுப் பொருட்கள்,
பெண்களுக்கான அலங்காரப்
பொருட்கள், எவர்சில்வர்
பாத்திரங்கள், ஒலிப்பதிவு,
ஒளிப்பதிவு நாடாக்கள்

அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

S I V A'S T R A D I N G C O L T D

ஸ்காபரோ நகரின் தன்னிகரற்ற
தமிழ் வியாபார நிலையம்

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

SIVA'S TRADING CO LTD
321-2739

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி, கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

அனைத்துப் பொருட்களும் மலிவு விலையில்

★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்) உடனுக்குடன் கிடைக்கும்

**3852 FINCH AVE EAST (KENNEDY/FINCH)**
**TEL:(416) 321 2739**

---

# P.S.T.T

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

5210 FINCH AVE EAST #23
(FINCH/MIDDLEFIELD)
TEL:609-0141

**VIDEO TRANSFER (ANY SYSTEM) $8.99**